

2024
நாடாளுமன்றத்
தேர்தல்

# பாசிச பா.ஜ.க.வை தேர்தலில் வீழ்த்துவது எப்படி?



2024 நாடாளுமன்றத் தேர்தல்:

# பாசிச பா.ஜ.க.வை தேர்தலில் வீழ்த்துவது எப்படி?

ம.க.இ.க. | பு.மா.இ.மு. | பு.ஜ.தொ.மு. | மக்கள் அதிகாரம்

*வெளியீடு:*
**பாசிச பா.ஜ.க.வை தேர்தலில்**
**வீழ்த்துவது எப்படி?**

*முதல் பதிப்பு:* **மார்ச் 2024**
*இரண்டாம் பதிப்பு:* **ஏப்ரல் 2024**
*மூன்றாம் பதிப்பு:* **ஏப்ரல் 2024**

*வெளியிடுவோர்:*
**மக்கள் கலை இலக்கியக் கழகம்,**
**புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி,**
**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி,**
*(மாநில ஒருங்கிணைப்புக் குழு)*
**மக்கள் அதிகாரம்,** *தமிழ்நாடு - புதுவை.*

*தொடர்புக்கு:*
97916 53200 - 94448 36642
73974 04242 - 99623 66321

*நன்கொடை:* **ரூ.20/-**
G-Pay No: **97916 53200**

*முகநூலில் பின்தொடருங்கள் :*
**மக்கள் அதிகாரம் - Makkal Athikaram**
**Revolutionary Students Youth Front - Rsyf**

*பாருங்கள் :* **Vinavu.com**
*படியுங்கள்:* **புதிய ஜனநாயகம்**

# பாசிச பா.ஜ.க. இந்திய மக்களின் முதல் எதிரி!

**அன்பார்ந்த உழைக்கும் மக்களே!**

2024 நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்டது. நமது நாடு எந்த திசையில் செல்லப் போகிறது என்பதைத் தீர்மானிக்கும் முக்கியமான தேர்தல் இது.

கடந்த பத்தாண்டுகள் இந்தியாவை சூறையாடிய பாசிச மோடி-அமித்ஷா கும்பல், மூன்றாவது முறையாக இந்த நாடாளுமன்றத் தேர்தலில் 370 இடங்களில் வெற்றியடைந்து, மூன்றில் இரண்டு பங்கு தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்துவிடலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறது.

இதற்காக அரசு அதிகாரத்தில் ஊடுறுவியிருக்கும் ஆர்.எஸ்.எஸ். கும்பலைப் பயன்படுத்தி பல்வேறு சதி நடவடிக்கைகள், மோசடி, முறைகேடுகளில் ஈடுபட்டு வருகிறது.

தேர்தல் கமிசன், அமலாக்கத்துறை மூலமாக எதிர்க்கட்சிகளுக்கு நெருக்கடி கொடுப்பது; மின்னணு இயந்திரங்கள் மூலம் மோசடி செய்வது; வடமாநிலங்களில் இந்துமதவெறியையும் தென்மாநிலங்களில் வளர்ச்சியையும் முன்னிறுத்தி மக்களை ஏமாற்றுவது; மிகைப்படுத்தப்பட்ட

செய்திகளையும் பொய் செய்திகளையும் பரப்பி மோடியை தேசியத் தலைவராகக் காட்டுவது; சங்கப் பரிவார கும்பல் மூலமாக வதந்திகளைப் பரப்புவது, இசுலாமிய வெறுப்புப் பிரச்சாரங்களைத் தீவிரப்படுத்துவது, திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலான அடுத்தடுத்த தொடர் நடவடிக்கைகள் மூலமாக மக்கள் மீதும் எதிர்க்கட்சிகள் மீதும் பல்வேறு தாக்குதல்களைத் தொடுப்பது, வேறெதையும் சிந்திக்கவிடாமல் அச்சத்திற்குள்ளாக்குவது போன்றவை மோடி-அமித்ஷா கும்பலின் பாசிச நடவடிக்கைகளுக்கு சில சான்றுகள் மட்டுமே.

மோடியின் தேர்தல் பிரச்சாரத்திற்கு ஏற்ற வகையில் இந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேதிகளை தேர்தல் கமிஷன் வகுத்திருப்பது; தேர்தல் பத்திரங்கள் தொடர்பான விவரங்களை வெளியிடுவதில் எஸ்.பி.ஐ. வங்கி அதிகாரிகள் உச்சநீதிமன்ற உத்தரவுகளையும் மீறி செயல்பட்டு மோடி-அமித்ஷா கும்பலைக் காப்பாற்ற முனைவது; தெலுங்கானாவில் பாரத் ராஷ்டிரிய சமிதியின் தலைவர் கவிதாவை அமலாக்கத்துறையை ஏவி கைது செய்திருப்பது; ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் கேஜ்ரிவாலைக் கைது செய்திருப்பது; எதிர்க்கட்சியான காங்கிரசு கட்சியின் வங்கிக் கணக்கை முடக்கியிருப்பது போன்ற மோடி-அமித்ஷா கும்பலின் மிக அண்மைய நடவடிக்கைகள், இந்த தேர்தலில் வெற்றிபெற மோடி-அமித்ஷா கும்பல் எந்த எல்லைக்கும் செல்லும் என்பதற்கான சான்றுகளாகும்.

## பத்தாண்டுகால பாசிச ஆட்சி

மோடி-அமித்ஷா கும்பலின் பத்தாண்டுகால ஆட்சி உழைக்கும் மக்களுக்கு ஓர் இருண்ட காலம், அம்பானி-அதானி போன்ற கார்ப்பரேட் முதலாளிகளுக்கோ, "அமிர்த காலம்".

கடந்த பத்தாண்டுகால ஆட்சியில் நாட்டின் பொருளாதாரம் மிகவும் பின்னடைந்துள்ளது; சிறுதொழில்கள் நசிந்துள்ளன; விவசாயம், சிறு வணிகங்கள் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளன; சீனாவில் இருந்து மலிவுவிலைப் பொருட்கள், இரும்பு போன்றவற்றின் இறக்குமதியால் இந்திய தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன; ஜி.எஸ்.டி. வரிவிதிப்பின் மூலமாக தென்மாநிலங்களைச் சுரண்டி "பசு வளைய மாநிலங்கள்" என்றழைக்கப்படும் குஜராத், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான் போன்ற மாநிலங்களுக்கு மிகப்பெரிய அளவில் சலுகைகள் வழங்கப்படுகின்றன; நீட், தேசியக் கல்விக் கொள்கை, தேசிய நதிநீர் கொள்கை, கிரிமினல் சட்டத்திருத்தம், தொழிலாளர் நலச் சட்டங்கள் திருத்தம் போன்ற பல்வேறு மக்கள் விரோத சட்டதிட்டங்களால் மக்களின்

பெரும்பகுதியினரின் வாழ்நிலைமை மேலும் மேலும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது; வேலையின்மை அதிகரித்துள்ளது; விலையேற்றம் அதிகரித்துள்ளது; இசுலாமியர்கள், கிருத்தவ மக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன; தலித் மக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன; பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

அம்பானி, அதானி, வேதாந்தா உள்ளிட்ட கார்ப்பரேட் முதலாளிகளின் வளர்ச்சியையே நாட்டின் வளர்ச்சியாக சித்தரிக்கிறது மோடி கும்பல். இந்த கார்ப்பரேட் முதலாளிகளோ உலகப் பணக்காரர்களாக உயர்ந்து வருகின்றனர். மொத்தத்தில், மக்களின் இரத்தத்தில், அம்பானிகளுக்கான சொர்க்கத்தை உருவாக்குகிறது பாசிச மோடி கும்பல்.

**பத்தாண்டுகால கொடிய ஆட்சியினால் நாடெங்கும் உழைக்கும் மக்களின் போராட்டங்கள் அதிகரித்துள்ளன. பாசிச மோடி–அமித்ஷா கும்பல் மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதுதான் பெரும்பான்மை மக்களின் ஒரே எண்ணமாக உள்ளது.**

இந்த பத்தாண்டுகளில் ஆர்.எஸ்.எஸ். என்னும் நச்சுப் பாம்பானது, நாட்டின் சமூக, அரசியல், பொருளாதாரம் என அனைத்துத் துறைகளிலும் அனைத்து இடங்களிலும் கிளை பரப்பியுள்ளது.

பெண்கள் மீது ஏவப்படும் பாலியல் வன்முறைகள், சமூகத்தை சீரழிக்கும் போதைக் கலாச்சாரம், கொலை, கொள்ளை, கட்டப் பஞ்சாயத்துகளில் ஈடுபடும் ரவுடி கும்பல்கள் போன்ற பல்வேறு குற்றங்களின் பின்னணிகளில் கணிசமான அளவுக்கு ஆர்.எஸ்.எஸ். கும்பல் உள்ளது. பா.ஜ.க.வின் பல முன்னணி பிரமுகர்கள் கேடி கிரிமினல்களாக இருப்பதையும் அவர்களது குற்றச்செயல்கள் அம்பலத்திற்கு வந்து அவ்வப்போது கைது செய்யப் படுவதையும் நாம் பார்க்கிறோம். இதுபோன்ற குற்றப் படையினரைக் கொண்டுதான் மதக்கலவரங்களை அரங்கேற்றி வருகிறது ஆர்.எஸ்.எஸ். சங்கப் பரிவாரக் கும்பல்.

டெல்லி, உத்தரப் பிரதேசம், ஹரியானா, மணிப்பூர், அஸ்ஸாம், திரிபுரா, கர்நாடகா, ஒரிசா, சத்தீஸ்கர், உத்தரகாண்ட், குஜராத், மஹாராஷ்டிரா என இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்களில் இசுலாமியர்கள், தலித்துகள், கிறித்துவர்கள், உழைக்கும் மக்கள் மீது ஆர்.எஸ்.எஸ். சங்கப் பரிவாரக் கும்பலால் கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

தொழிலாளர்கள் உரிமை கேட்டுப் போராடினாலோ, விவசாயிகள் போராட்டங்கள் நடத்தினாலோ உள்ளூர் சமூக விரோதிகள், கார்ப்பரேட்டு களுடன் சேர்ந்து கொண்டு மக்களை ஒடுக்குவதும் இந்த ஆர்.எஸ்.எஸ். சங்கப் பரிவார கும்பல்தான்.

மோடி அரசின் மக்கள் விரோதத் திட்டங்களால் மக்களிடம் ஏற்பட்டுள்ள அதிருப்தியில் இருந்து மக்களை திசைத்திருப்புவதற்காகவும் இந்து முனைவாக்கம் செய்து ஓட்டு அறுவடை செய்வதற்காகவும், அயோத்தியில் ராமர் கோவிலைத் திறந்து வைத்தது, அபுதாபியில் இந்து கோவிலைக் கட்டியது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது. மற்றொருபுறம், குடியுரிமை சட்டத்திருத்தத்தை (சி.ஏ.ஏ.வை) நடைமுறைப்படுத்துவது, பொதுசிவில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்ற பெயரில் இசுலாமிய மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளைத் தீவிரப்படுத்தி வருகிறது; சிறுபான்மை மக்களுக்கெதிரான வன்முறைகளைத் தூண்டிவிடுகிறது.

பத்தாண்டுகால கொடிய ஆட்சியினால் நாடெங்கும் உழைக்கும் மக்களின் போராட்டங்கள் அதிகரித்துள்ளன. பாசிச மோடி-அமித்ஷா கும்பல் மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதுதான் பெரும்பான்மை மக்களின் ஒரே எண்ணமாக உள்ளது.

## சட்டத்தின் வழியே அரங்கேறும் இந்துராஷ்டிர பயங்கரவாதம்

சட்டத்தின் ஆட்சி என்று சொல்லிக்கொள்ளப்படும் இந்த ஜனநாயக அமைப்பைத் தகர்த்து, பார்ப்பன இந்து மதவெறியர்களின் கும்பல் ஆட்சியை மேலிருந்து கீழ்வரைக் கட்டியமைப்பதுதான் இந்துராஷ்டிரம். இதனைத்தான், “புதிய இந்தியா” என்று பாசிச மோடி கும்பல் வஞ்சகமாகக் கூறி வருகிறது.

ஜனநாயக உரிமைகளை பெயரளவில் கொண்டுள்ள இந்திய அரசியல் சாசனமும் அரசியல் கட்டமைப்பும் எதேச்சாதிகாரமாக இருப்பதுதான் பாசிசம் வருவதற்கான அடிப்படையாகும். இந்த போலி ஜனநாயகத்தின் சந்து பொந்துகளைப் பயன்படுத்தி, ஆட்சி அதிகாரத்தில் பெரும்பான்மை பெற்று, அதன் மூலமாகவே இந்துராஷ்டிர பயங்கரவாதத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. பாசிசக் கும்பல். அதற்காக, தற்போது இருக்கும் சட்ட நடைமுறைகள் அனைத்தும் பிரிட்டிஷ் காலத்தில் உருவாக்கப்பட்டவை, அதனால் அவற்றைத் தூக்கியெறிய வேண்டும் என கூறியும், தம்மை காலனியாதிக்க எதிர்ப்பாளர்கள் போல போலியாகக் காட்டிக்கொண்டும் பார்ப்பனிய பயங்கரவாத சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களில் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி, காவிமயமாக்கும் நோக்கத்தில் இருந்து வரலாற்றை மாற்றுவது, பாடபுத்தகங்களைத் திருத்துவது, ஊர்களின் பெயர்களை மாற்றுவது தொடங்கி, பல்கலைக்கழகங்களில் ஆர்.எஸ்.எஸ். ஊடுருவலை அதிகரிப்பது, மாணவர் சங்கங்களுக்கு தடைவிதிப்பது போன்ற பல்வேறு இந்துமுனைவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்தது, நாடாளுமன்றத்திற்கு புதிய கட்டடம், அயோத்தியில் ராமர் கோவில் ஆகியவற்றைத் திறந்துவைத்தது; இதுபோன்ற அரசின் முக்கியமான நிகழ்ச்சிகளுக்கு பெண் என்பதற்காகவும் தலித் என்பதற்காகவும் இந்தியாவின் ஜனாதிபதியை அழைக்க மறுத்தது; பொதுசிவில் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்தது; சி.ஏ.ஏ.வை நடைமுறைப்படுத்தி வருவது என அனைத்து பாசிச நடவடிக்கைகளையும் தனக்கு வழங்கப்பட்டுள்ள சட்டபூர்வ அதிகாரத்தைப் பயன்படுத்தியே நிறைவேற்றி வருகிறது.

பா.ஜ.க.வின் பல்வேறு இந்துமுனைவாக்க நடவடிக்கைகளுக்கு நீதிமன்றங்கள் தான் உற்ற துணையாக உள்ளன. தப்பித்தவறி நீதிமன்றங்கள் பா.ஜ.க.விற்கு எதிராக தீர்ப்பு வழங்கிவிட்டால், அந்தத் தீர்ப்புகளை பா.ஜ.க. துரும்பளவிற்கும் மதிப்பதில்லை. அண்மையில், தேர்தல் பத்திரங்களுக்குத் தடைவிதித்து, அவற்றை பொதுவெளியில் வெளியிட வேண்டும் என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பை எஸ்.பி.ஐ. வங்கி அதிகாரிகள் சிறிதும் மதிக்காதது இதற்குத் தக்கச் சான்றாகும்.

இந்த தேர்தல் பத்திர விவகாரம் நமக்கு உணர்த்துவதென்ன?

கார்ப்பரேட் முதலாளிகளிடம் காசு வாங்குவதில் இருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது மட்டுமல்ல, அது தொடர்பான விவரங்களை மக்களுக்குத் தெரிவிக்காமல் தடுக்கும் வகையில், மோடி கும்பல் தனக்கு சட்டப்பாதுகாப்பை ஏற்படுத்திக் கொண்டது. இதன் மூலம், கார்ப்பரேட் முதலாளிகளிடமிருந்து ஆறாண்டுகளில் மட்டும் சுமார் 7,000 கோடி ரூபாய் பா.ஜ.க. வாங்கியுள்ளது. கார்ப்பரேட் முதலாளிகளுக்கு உகந்த சட்ட திட்டங்களை நிறைவேற்றியதற்கும் அவற்றின் சட்டவிரோத

**அனைத்து பாசிச நடவடிக்கைகளையும் தனக்கு வழங்கப்பட்டுள்ள சட்டபூர்வ அதிகாரத்தைப் பயன்படுத்தியே பாசிசக் கும்பல் நிறைவேற்றி வருகிறது.**

நடவடிக்கைகளை மறைப்பதற்குமான சன்மானமாகவும் எதிர்க்கட்சிகளை ஆதரிக்கும் கார்ப்பரேட் நிறுவனங்களை மிரட்டியும் இந்தக் கொள்ளையை அரங்கேற்றியுள்ளது.

இதற்கெதிராக வழக்கு தொடுக்கப்பட்டு ஐந்தாண்டுகள் வரை எந்த நடவடிக்கையையும் எடுக்காத உச்சநீதிமன்றம், இந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் பத்திரங்கள் விற்பதற்கான இறுதி தேதிவரை மோடி கும்பலை கொள்ளையடிக்க அனுமதித்துவிட்டு, மோடி ஆட்சிக்காலம் முடியும் தருவாயில்தான் இதற்கு தடைவிதித்தது. ஆனால், தேர்தல் பத்திரங்கள் மூலமாக கட்சிகள் பெற்ற நிதியை நீதிமன்றம் பறிமுதல் செய்யவில்லை!

தேர்தல் பத்திரங்களைப் போன்றே, அரசியல் சாசனத்திற்கு எதிராகத்தான் மோடி அரசு பல்வேறு சட்ட திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. ஆனால், அவற்றில் பெரும்பாலானவற்றிற்கு உச்சநீதிமன்றம் அனுமதியும் கொடுத்துள்ளது என்பதுதான் எதார்த்தமாகும். இவையன்றி, தமிழ்நாடு உயர்நீதிமன்றம் பழனி கோவிலில் பிற மதத்தினர் நுழைய தடைவிதித்தது, தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ். பேரணிகளுக்கு அனுமதி வழங்கியது, சாதிமதமற்றவர் என சான்று வழங்க வட்டாட்சியருக்கான அதிகாரத்தைப் பறித்தது; மெய்தி இன மக்களுக்கு பழங்குடி பட்டியலில் இட ஒதுக்கீடு வழங்கக் கோரி மணிப்பூர் உயர்நீதிமன்றம் பரிந்துரைத்தது; உ.பி. உயர்நீதிமன்றம் முசார்பர்நகர் கலவரத்தில் ஈடுபட்ட காவி குண்டர்களை விடுதலை செய்தது; அலகாபாத் உயர்நீதிமன்றம் பாலியல் குற்றவாளிகளுக்கு ஜாதகம் பார்க்க சொன்னது; கர்நாடக உயர்நீதிமன்றம் ஹிஜாப் தடையை அங்கீகரித்தது; எதிர்க்கட்சிகள் மீது அமலாக்கத் துறையை ஏவி வேட்டையாடும் பா.ஜ.க.விற்கு துணையாக இருப்பது போன்ற நீதிமன்றங்களின் பல நடவடிக்கைகள் நீதித்துறை காவியமாகியிருப்பதற்கு சான்றுகளாகும்.

இவைமட்டுமின்றி, அயோத்தியில் ராமர் கோவில் திறப்பு விழாவை நடத்தியதன் மூலம் இந்தியாவை இந்துக்களின் நாடாக உலக அரங்கில் பிரச்சாரம் செய்கிறது. நாடெங்கும் இசுலாமியர்களுக்கும் தலித்துகளுக்கும் எதிராக காவி குண்டர்கள் பயங்கரவாதத் தாக்குதல்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. இசுலாமியர்களின் வீடுகளைத் திட்டமிட்டு இடிக்கும் “புல்டோசர் ராஜ்” என்ற பயங்கரவாதத்தை பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் அரங்கேற்றி வருகின்றன. இவற்றை, எந்த நீதிமன்றங்களும் இதுவரை தடுக்கவில்லை.

தேர்தலுக்கு மிக நெருக்கமான இந்த சூழலில் கூட, டெல்லியில் போலீசே, ரமலான் தொழுகையில் ஈடுபட்ட இசுலாமியர்கள் மீது தாக்குதல்

நடத்தியிருப்பதும் ரமலான் நோன்பு தொடங்கும் தினத்தன்று சி.ஏ.ஏ. நடைமுறைக்கு வருவதாக மோடி அரசு அறிவித்திருப்பதும் சட்டத்தின் வழியாகவும் அரசு அதிகாரத்தின் வழியாகவும் காவி பயங்கரவாதம் அரங்கேறுவதற்கு மிக அண்மைய சாட்சிகளாகும்.

மக்கள் மீதான மிகக்கொடிய பயங்கரவாதத் தாக்குதலான பணமதிப்பிழப்பு நடவடிக்கையை, நாடாளுமன்றத்தில் விவாதிக்காமல், சொந்த அமைச்சர்களுக்கே தெரியாமல் முடிவெடுத்து நடைமுறைப்படுத்தியது; இதைப்போலவே, கொரோனா ஊரடங்கு காலத்தில் அறிவிக்கப்பட்ட நாடுதழுவிய ஊரடங்கு உத்தரவை, சுகாதாரத்துறையைக் கூட கலந்தாலோசிக்காமல் அறிவித்தது; பிரதமரை விமர்சிக்கும் எதிர்க்கட்சி தலைவரை நாடாளுமன்றத்தில் இருந்து நீக்கியது; நாடாளுமன்றத்தில் தமக்கு எதிராக வாக்களிக்க இருந்த 146 எதிர்க்கட்சி எம்.பி.க்களை சஸ்பெண்ட் செய்துவிட்டு தமக்கு தேவையான சட்டங்களை நிறைவேற்றியது; கார்ப்பரேட் முதலாளிகளான அம்பானி-அதானிகளின் முறைகேடுகளை நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு அனுமதி மறுத்தது, மீறி பேசியவர்களின் உரையை நாடாளுமன்றத்தின் அவைக்குறிப்பில் இருந்து நீக்கியது; இந்திய ஜனநாயகத்தில் மிச்சமீதமிருந்த வெளிப்படைத் தன்மைகள் அனைத்தையும் முடிவுக்குக் கொண்டுவந்தது மட்டுமின்றி, பட்ஜெட் போன்ற முக்கிய நிகழ்வுகளைக் கேலிக்குரியதாக்கிவிட்டது; நாட்டின் தலைமை தேர்தல் ஆணையரை நியமிப்பது, உச்சநீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது உள்ளிட்ட அனைத்தையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துவிட்டது... இவ்வாறாக, பாசிச சர்வாதிகார ஆட்சியை அரங்கேற்றி வருகிறது மோடி அரசு.

இசுலாமிய மக்கள் மீது தாக்குதல் தொடுப்பதற்கும், பாசிச பா.ஜ.க. மற்றும் அதன் அடக்குமுறைகளுக்கும் எதிராகப் போராடுபவர்களைச் "சட்டப்படி" தடுக்கும் வகையில், கிரிமினல் சட்டங்களையும் திருத்திவிட்டது.

மொத்தத்தில், நமது நாட்டில் காவி பயங்கரவாதிகள் சொல்வதுதான் சட்டம் என்ற நிலைமை உருவாகியுள்ளது.

## பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்துராஷ்டிரம் நிலைநாட்டப்பட்டுவிடும்

மோடி கும்பல் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து நிலைமைகளும் மேலும் மேலும் தீவிரமடையும்.

அம்பானி, அதானி, மிட்டல் போன்ற கார்ப்பரேட் முதலாளிகளின்

> **மக்கள் விரோதத் தன்மையை தனது இயல்பாகக் கொண்ட ஆர்.எஸ்.எஸ் – பா.ஜ.க. சங்கப் பரிவார கும்பல்தான் இந்திய மக்களின் முதல் எதிரி!**

கட்டற்ற சுரண்டலுக்கு தடையாக இருக்கும் விவசாயிகள், பழங்குடி மக்கள், மீனவர்கள், சிறு வியாபாரிகள், தொழிலாளர்கள், சிறு முதலாளிகள் மீதும் கொடிய கருப்புச் சட்டங்கள் ஏவப்படுவது அதிகரிக்கும்; அதுமட்டுல்ல, அம்பானிக்கும், அதானிக்கும் போட்டியாக தொழில் நடத்தும் கார்ப்பரேட் முதலாளிகள் மீதும் அமலாக்கத்துறையை ஏவுவது, பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்து, அவர்களது தொழில்களைக் கைப்பற்றுவது போன்ற பயங்கரவாதங்களும் அதிகரிக்கும்.

பார்ப்பனிய மனுதர்மத்தை எதிர்க்கும் சித்தாந்தப் பின்னணி கொண்ட திராவிட, அம்பேத்கரிய, கம்யூனிச இயக்கங்கள், கட்சிகள் அனைத்தும் அழிக்கப்படும். "காங்கிரசு இல்லாத இந்தியா" என்று பா.ஜ.க.வினர் கூறியதன் உண்மையான பொருள், "எதிர்க்கட்சிகள் இல்லாத இந்தியா" என்பதுதான். அதுமட்டுமல்ல, காவி சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டாலும், அம்பானி, அதானி, அகர்வால், வேதாந்தா போன்ற கார்ப்பரேட் முதலாளிகளுக்கு எதிரான, ஆர்.எஸ்.எஸ்.க்குக் கட்டுப்படாத கட்சிகளுக்குக் கூட (உத்தவ் தாக்கரே சிவசேனா போன்ற) இனி இடம் கிடையாது என்ற நிலைமை நிலைநாட்டப்பட்டுவிடும்.

பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், "ஒரே நாடு ஒரு தேர்தல்" முறையை நடைமுறைப்படுத்தும். இதன் மூலமாக, தேர்தல் என்பது ஒரு சடங்காக மாற்றப்பட்டுவிடும். வங்காள தேசத்தில் தேர்தல் ஆணையம் உள்ளிட்ட அனைத்து அரசு நிறுவனங்களையும் தனது கைக்குள் போட்டுக்கொண்டு எதிர்க்கட்சிகளை ஒடுக்கி ஷேக் ஹசீனா கும்பல் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது போல, எதிர்க்கட்சிகளுக்கான ஜனநாயக உரிமைகளை நசுக்கி ரசியாவில் புடின் ஆட்சியைக் கைப்பற்றியதைப் போல, ஆளும் பா.ஜ.க.வே மீண்டும் மீண்டும் வெற்றி பெறும் வகையில் தேர்தல் கட்டமைப்பு சடங்காக மாற்றப்பட்டுவிடும். இத்துடன், தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் இரண்டு அல்லது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுவிடும்.

இவை மட்டுமின்றி, பொதுசிவில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது; பள்ளி-கல்லூரிகளையும் அரசு அலுவலகங்களையும் காவி குண்டர்கள், சாமியார்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவருவது; தேசிய கீதத்தை மாற்றியமைப்பது; "இந்தியா" என்ற பெயரை "பாரத்" என்று மாற்றுவது; பெண்களுக்கான சொத்துரிமையைப் பறிப்பது; கல்வி நிறுவனங்களுக்குச்

சென்று பெண்கள் கல்வி கற்பதைத் தடுப்பது; குலக்கல்வி அடிப்படையில் ஏழை மாணவர்களைக் கல்வி நிறுவனங்களில் இருந்து வெளியேற்றுவது, சாதித் தொழிலை செய்ய வைப்பது; இறைச்சி உணவுகளுக்குத் தடைவிதிப்பது; இந்து அறநிலையத் துறையை அழித்து கோவில்களை பார்ப்பனர்கள், ஆதிக்கச் சாதி கும்பல்களுக்கு சொந்தமாக்குவது; இந்தியையும் சமஸ்கிருதத்தையும் கட்டாய மொழிகளாக்குவது; தமிழ்நாட்டின் பார்ப்பன எதிர்ப்பு ஜனநாயக மரபுகளை அழித்து காவிமயமாக்குவது; மணிப்பூரில் குக்கி பழங்குடி மக்கள் மீது பொய்யான காரணங்களைக் கூறி அவர்கள் மீது இனவெறித்தாக்குதல்களை அரங்கேற்றி, குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றி முகாம்களில் அடைத்து வைத்ததைப் போல, நாடு முழுவதுமுள்ள கிருத்தவர்கள், தலித்துகள், இசுலாமிய மக்கள் மீதும் மதவெறி-இனவெறித்தாக்குதல்களை அரங்கேற்றி, அவர்களை திறந்த வெளி சிறைச்சாலைகளில் அடைப்பது; ஜெர்மனியின் பாசிஸ்ட் இட்லர் உருவாக்கியது போன்ற வதை முகாம்களை உருவாக்கி மக்களை படுகொலை செய்வது - என அடுக்கடுக்கான பயங்கரவாதத் திட்டங்கள் அரங்கேற்றப்படும்.

ஆகையால், எதிர்க்கட்சிகள் கார்ப்பரேட் கட்சிகளாக இருக்கலாம்; ஊழல் கட்சிகளாகவும் இருக்கலாம்; அல்லது பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுகின்ற கட்சிகளாகவும் இருக்கலாம். ஆனால், இவை அனைத்திலிருந்தும் முற்றிலும் வேறுபட்ட, மக்கள் விரோதத் தன்மையை தனது இயல்பாகக் கொண்ட பாசிச அமைப்பு எனில் அது ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. சங்கப் பரிவார கும்பல்தான். ஆகையால்தான், **ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க.வை இந்திய மக்களின் முதல் எதிரி** என்று குறிப்பிடுகிறோம்.

இந்திய மக்களுக்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள நாடுகளான இலங்கை, வாங்காளம், நேபாளம், பூடான், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், மியான்மர், மாலத்தீவு உள்ளிட்ட நாடுகளின் மக்களுக்கும் முதன்மை எதிரி, அகண்ட பாரதத்தை இலட்சியமாகக் கொண்ட ஆர்.எஸ்.எஸ். சங்கப் பரிவார அமைப்புதான்.

★★★

# தேர்தலில் பாசிச பா.ஜ.க. வீழ்த்தப்பட வேண்டும், ஆனால்...

**மோடி: பாசிசத்தின் முகமூடி!**

“இந்தியா” கூட்டணி குறித்து குறிப்பிடும் போது, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், “இந்தக் கூட்டணி என்பது யார் நாட்டை ஆள வேண்டும் என்பதற்கான கூட்டணி அல்ல, யார் நாட்டை ஆளக்கூடாது என்பதற்கான கூட்டணி” என்று குறிப்பிட்டார். பா.ஜ.க. எதிர்ப்பு, மோடி எதிர்ப்புதான் “இந்தியா” கூட்டணியின் அடிப்படை என்று எதிர்க்கட்சிகள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

ஆர்.எஸ்.எஸ்.யின் உறுப்பினரான மோடி ஒரு தனிநபராக சித்தரிக்கப்படுகிறார். மோடியின் பாசிச நடவடிக்கைகள் அவரது தனிப்பட்ட நடவடிக்கைகளாக மட்டுமே சித்தரிக்கப்படுகிறது. அமித்ஷாவின் தேர்தல் யுக்திகளை, அமித்ஷாவின் வியூகம் என்று ஊடகங்கள் குறிப்பிடுகின்றன; அவரது சாணக்கியத்தனம் என்று மோடி ஆதரவு மீடியாக்கள் புகழவும் செய்கின்றன.

ஆனால், மோடியும் அமித்ஷாவும் வெறும் தனிநபர்கள் அல்ல. இந்தியாவில் பார்ப்பன சனாதனத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்காக சித்தாந்த பூர்வமாக அமைக்கப்பட்ட, பயங்கரவாத அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.யின் உறுப்பினர்கள். இந்த ஆர்.எஸ்.எஸ். என்பது, விஷ்வ

**மோடியும் அமித்ஷாவும் வெறும் தனிநபர்கள் அல்ல. பயங்கரவாத அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.யின் உறுப்பினர்கள்.**

இந்து பரிஷத், இந்து முன்னணி, ஜன கல்யான், ஹனுமன் சேனா, ராமன் சேனா போன்ற பல குண்டர் படைகளைக் கொண்ட சங்கப் பரிவார அமைப்பாகும். அதன் தேர்தல் அமைப்புதான் பா.ஜ.க.

இந்த பா.ஜ.க.வின் முகமாக இருக்கும் மோடி-அமித்ஷா கும்பலானது, அம்பானி, அதானி, வேதாந்தா, மிட்டல், டாடா, பிர்லா போன்ற மார்வாரி, குஜராத்தி, பார்ப்பன, பனியா பின்னணி கொண்ட கார்ப்பரேட் முதலாளிகளின் கொள்ளைக்காக நாட்டை சூறையாடுவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றது. ஒருபுறம் இந்துராஷ்டிரம் இன்னொரு புறம், அம்பானி-அதானி கார்ப்பரேட் கும்பலின் சூறையாடல் ஆகிய இரண்டு இலக்குகளைக் கொண்டதுதான் பா.ஜ.க.வும் ஆர்.எஸ்.எஸ்.யும்.

மொத்தத்தில், மோடிக்குப் பின்னால் இந்த பார்ப்பன பாசிச குண்டர் படை திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. ஆகையால், ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க.; அம்பானி-அதானி பாசிச கும்பலின் முகமூடிதான் பாசிச மோடி!

## தேர்தலில் பாசிச பா.ஜ.க. வீழ்த்தப்பட வேண்டும் ஆனால்,

காங்கிரசு, தி.மு.க., வி.சி.க., சி.பி.எம்., சி.பி.ஐ. போன்ற கட்சிகளின் தலைவர்கள் “மோடி ஒரு முகமூடி” என்று உணர்ந்து வைத்துள்ளனர். அதன் பலம் பா.ஜ.க. மட்டுமல்ல, தேர்தல் கட்டமைப்புக்கு வெளியில் விரிவாக இருப்பதாகவும் இவர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், தற்போது நாடாளுமன்றத் தேர்தல் நேரம் என்பதால், தேர்தலில் மோடியை அடையாளப்படுத்தி எதிர்ப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

ஆனால், இதுநாள் வரை ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க.வை வீழ்த்துவதற்கான எந்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டதில்லை; காங்கிரசு இல்லாத இந்தியா என்று மோடி-அமித்ஷா கும்பல் கொக்கரிக்கிறது. எதிர்க்கட்சிகளோ ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. இல்லாத இந்தியா என்று சொல்வதற்கு இன்றுவரை துணியவில்லை. மாறாக, பா.ஜ.க.வை ஜனநாயக பூர்வமாகவே அணுகி வருகின்றன. அந்தவகையில், தேர்தலில் பா.ஜ.க.வைத் தோற்கடிப்பது என்ற அளவிலேயே செயல்படுகின்றன.

அதேவேளையில், தற்போதைய நாடாளுமன்றத் தேர்தலில் மட்டும் மோடி மீண்டும் வெற்றி பெற்றுவிட்டால், இந்தியாவிற்கு எதிர்காலம் என்றொன்று இல்லை; இனி, தேர்தலே இருக்காது; இத்துடன் மீண்டும் அடிமை நிலைக்கு நாம் தள்ளப்பட்டுவிடுவோம், ஆகையால், இந்தத் தேர்தல் என்பது வாழ்வா சாவா போராட்டம் என்றெல்லாம் எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவது உண்மைதான்; மோடி-அமித்ஷா கும்பல் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் வீழ்த்தப்பட வேண்டும்தான்.

அவ்வாறு இக்கும்பல் வீழ்த்தப்படுவதானது, பாசிசத்திற்கு குறிப்பிட்டத்தக்க இழப்பை ஏற்படுத்தும்; பாசிசம் ஏறித்தாக்கிவரும் நிகழ்வில் ஒரு தடையை ஏற்படுத்தும்.

எனினும், தேர்தல் கட்டமைப்பிற்குள் மோடியையும் பா.ஜ.க.வையும் வீழ்த்திவிட முடியுமா என்பதுதான் நம்முன் உள்ள கேள்வி. இந்தக் கேள்விக்கு உரிய காரணங்களும் இருக்கின்றன.

### பா.ஜ.க.வின் கைப்பாவையாக மக்கள் விரோத தேர்தல் ஆணையம்

மோடி-அமித்ஷா கும்பல், இந்திய அரசியல் கட்டமைப்பில் இருந்த பெயரளவிலான ஜனநாயக அம்சங்களை வெட்டியெறிந்து வரும் அதேவேளையில், இன்னும் ஒருசில அம்சங்களை மட்டும் விட்டு வைத்துள்ளது. அதில் ஒன்று தேர்தல்!

மோடி-அமித்ஷா கும்பல் தனது அதிகார பலம், பண பலத்தைக் கொண்டு குதிரை பேரங்கள் நடத்துகிறது; அமலாக்கத்துறையை ஏவி எதிர்க்கட்சியினரை முடக்கி பிளவுபடுத்துகிறது; இவற்றையும் மீறி எதிர்க்கட்சியினர் தேர்தலில் போட்டியிட்டாலும் அவர்களால் வெற்றி பெற முடியாத வகையில், தேர்தல் கட்டமைப்பையே மாற்றியமைக்கிறது என்று எதிர்க்கட்சிகளே புலம்புகின்றனர். இதற்கேற்ப தேர்தல் கமிசனும் மோடி-அமித்ஷா கும்பலுக்கு கைப்பாவையாக செயல்படுகிறது.

- ❑ எதிர்க்கட்சிகள் ஓட்டுக்குப் பணம் கொடுப்பது குற்றம் என்று கூறும் தேர்தல் கமிசன், ஓட்டுக்காக பா.ஜ.க. இந்துமதவெறியைத் தூண்டும் வகையில் பிரச்சாரம் செய்வதைத் தடுப்பதில்லை.
- ❑ எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் மக்களுக்கு இலவசங்களை வழங்குவதைத் தடுக்கும் தேர்தல் கமிஷன், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் வழங்கப்படும் இலவசங்களைத் தடுப்பதில்லை, கண்டிப்பதும் இல்லை.
- ❑ நாட்டின் தலைமை தேர்தல் அதிகாரியை பா.ஜ.க. நியமிக்கும்

வகையில், சட்டம் திருத்தப்பட்டுள்ளது. அதன் விளைவாக, பா.ஜ.க.வால் நியமிக்கப்பட்டவர்கள் தான் தலைமை தேர்தல் ஆணையர்களாக உள்ளனர்.

❑ மோடியின் பிரச்சாரப் பயணத்திற்கேற்ற வகையில் தேர்தல் கால அட்டவணையை அமைத்துக் கொடுத்துள்ளது தேர்தல் கமிசன்.

❑ மின்னணு வாக்குப் பதிவு எந்திரங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் தலைமை பொறுப்பில், பா.ஜ.க.வினர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த மின்னணு வாக்கு எந்திரங்களைக் கொண்டு தேர்தலை நடத்துவது சுதந்திரமான உண்மையான தேர்தலாக இருக்காது என்று கூறி எதிர்க்கட்சிகள் போராடி வருகின்றனர். எனினும், மின்னணு வாக்குப் பதிவு எந்திரங்களைக் கொண்டே தேர்தலை நடத்துகிறது, தேர்தல் கமிசன்.

**மோடி–அமித்ஷா கும்பல், இந்திய அரசியல் கட்டமைப்பில் இருக்கும் ஒருசில அம்சங்களை மட்டும் விட்டு வைத்துள்ளது. அதில் ஒன்றுதான் தேர்தல்!**

தேர்தல் கமிசன் பா.ஜ.க.வின் எடுபிடியாக மாறிவிட்டது என்பதற்கு இவை சில முக்கிய சான்றுகளே. மொத்தத்தில், கோடீஸ்வர்கள் மட்டும் பங்கேற்கும் வகையில் மக்கள் விரோதத்தன்மையுடன் இருக்கும் இந்த தேர்தல் கட்டமைப்பானது, இப்போது முழுவதும் காவிமயமாகியுள்ளது. இந்தத் தேர்தலைக் கொண்டு பா.ஜ.க.வை வீழ்த்துவது என்பது மிகக் கடுமையான காரியமே.

## சங்கப் பரிவார குண்டர் பலம்: ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகளே சாட்சி

தேர்தல் கட்டமைப்பில் இருந்த பெயரளவிலான ஜனநாயாக அம்சங்கள் எல்லாம் அகற்றப்பட்டு தேர்தல் என்பதே பா.ஜ.க.வின் ஆடுகளமாக மாற்றப்பட்டிருப்பதற்கு சிறந்த சான்று, கடைசியாக நடந்த ஐந்து மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கான தேர்தல்களாகும். காங்கிரசு கூட்டணி வெற்றிபெறும் என எதிர்க்கட்சிகளால் பெரிதும் நம்பப்பட்ட, பா.ஜ.க. எதிர்ப்புணர்வு மேலோங்கியிருந்த சத்தீஸ்கர் சட்டமன்றத் தேர்தலிலேயே பா.ஜ.க. வெற்றி பெற்றது.

இந்த ஐந்து மாநிலத் தேர்தல்களில் மக்கள் பிரச்சினைகளைப் பற்றி பேசுவதைத் தவிர்த்துவிட்டு காங்கிரசு முன்னெடுத்த மிதவாத இந்துத்துவ அரசியலை மக்கள் நம்பவில்லை. இராஜஸ்தான், சத்தீஸ்தர் மாநிலங்களில்

காங்கிரசுதான் கடந்த ஐந்தாண்டுகள் ஆட்சி புரிந்தது. அதனால், ஆளுங்கட்சிக்கு எதிராக மக்களின் மனநிலை மாறியுள்ளது. இத்துடன், அதிகாரக் கட்டமைப்பில் பா.ஜ.க.வின் செல்வாக்கு அதிகரித்திருப்பது முக்கியமான காரணமாகும்.

தேர்தல் ஆணையம் மட்டுமல்ல, நாட்டின் பெரும்பாலான மைய தேசிய ஊடகங்கள் அனைத்தும் மோடி-அமித்ஷா கும்பலின் ஊதுகுழலாகவே செயல்படுகின்றன. மக்கள் பிரச்சினைகள், மக்களின் போராட்டங்களை மறைத்தும் திசைத்திருப்பியும் மோடி-அமித்ஷா கும்பலுக்கு சேவை செய்கின்றன.

மேலும், ஆர்.எஸ்.எஸ். சங்கப்பரிவார குண்டர்கள், இந்து மதக் கலவரங்களைத் தூண்டிவிட்டு இந்துமுனைவாக்கத்தைத் தீவிரப்படுத்துவது, எதிர்க்கட்சிகளுக்கெதிராக பொய்களையும் வதந்திகளையும் பரப்புவது, பா.ஜ.க.விற்கு ஆதரவாக தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவது, தமக்கெதிராக வாக்களிக்க வாய்ப்புள்ள இசுலாமியர்கள், தலித்துகளை வாக்களிக்க வரவிடாமல் தடுப்பது போன்ற பல்வேறு பாசிச நடவடிக்கைகளில் ஈடுபட்டது மற்றொரு முக்கிய காரணமாகும்.

## பா.ஜ.க. எதிர்ப்பை அறுவடை செய்வதும் பா.ஜ.க.விற்கு முட்டுக்கொடுப்பதும்

மோடி-அமித்ஷாவுடன் இணைந்து தேர்தலை எதிர்கொண்டால் தமிழ்நாட்டில் டெபாசிட் கூட தேறாது என்றுணர்ந்த, பா.ஜ.க.வின் அடிமை அ.தி.மு.க. தனித்து நிற்பதாக தமிழ்நாட்டில் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகிறது; தன்னை பா.ஜ.க. எதிர்ப்பாளராகக் காட்டிக் கொள்வதன் மூலம், தமிழ்நாட்டில் உருவாகியிருக்கும் பா.ஜ.க. எதிர்ப்பலையை அறுவடை செய்து கொள்ள முயற்சிக்கிறது.

எடப்பாடியும் அவரை சுற்றியுள்ள சில எடுபிடிகளும் மோடியையும் ஒன்றிய அரசையும் விமர்சிக்காமல், அண்ணாமலைக்கு எதிராக மட்டுமே லாவணி பாடி அப்பட்டமாக நாடகமாடுகின்றன. இதைப்போலவே, கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம் கட்சியும் அ.தி.மு.க. கூட்டணியில் இணைந்து பா.ஜ.க. எதிர்ப்பு அரசியலை தனக்கு சாதகமாக்கிக் கொள்ள முயற்சிக்கிறது.

இசுலாமிய சிறைவாசிகளை விடுவிப்பதாக அறிவித்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றாமல் தி.மு.க. துரோகமிழைத்தது. இதனை காரணம் காட்டி, எஸ்.டி.பி.ஐ. கட்சி அ.தி.மு.க. ஆதரவு நிலையெடுத்துள்ளதாகக் கூறுகிறது. அதேவேளையில், சி.ஏ.ஏ.வைக்

கொண்டுவருவதற்கு ஒரே காரணமாக இருந்த அ.தி.மு.க.வை இக்கட்சி ஆதரிப்பது என்பது, இசுலாமிய மக்களுக்கு இழைக்கும் துரோகமாகும்.

அதைப்போலவே, காங்கிரசை அழிக்க உருவாக்கப்பட்ட அன்னா ஹசாரே - கெஜ்ரிவால் கூட்டணி போல, தமிழ்நாட்டில் தி.மு.க.வை ஒழிப்பதற்கு உருவாக்கப்பட்ட நபர்தான் கமல்ஹாசன். இந்த தேர்தல்நேர அரசியல்வாதியை தி.மு.க. தனது கூட்டணியில் இணைத்துக் கொண்டது தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்யும் துரோகமாகும். பா.ஜ.க.-அ.தி.மு.க. எதிர்ப்புணர்வை தி.மு.க.வுடன் இணைந்து அறுவடை செய்துகொண்ட பின்னர், தி.மு.க.விற்கு எதிராக திரும்பும் கோடாரி காம்புதான் கமல்ஹாசன்.

இத்துடன், நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட அரை பாசிச கட்சிகளும் பா.ஜ.க. எதிர்ப்பை அறுவடை செய்து கொள்வதற்கு முயற்சிக்கின்றன.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, மாயாவதி, ஓவைசி என நாடு முழுவதும் இதுதான் நிலைமை.

மற்றொருபுறம், பா.ம.க., நிதிஷ்குமார், ஜான்பண்டியன் கட்சிகளைப் போல ஒவ்வொரு மாநிலத்திலும் குறிப்பிட்ட பகுதிகளில் செல்வாக்கு செலுத்தக் கூடிய சாதிக் கட்சிகள், பிழைப்புவாதக் கட்சிகள் பா.ஜ.க.விற்கு முட்டுகொடுக்கின்றன. எதிர்க்கட்சிகளைப் பிளவுபடுத்தி, ஒரு பிரிவை தன்னுடன் கூட்டணி அமைத்துக் கொள்வதும், விஜயதாரணி போன்ற பிழைப்புவாதிகளை விலைக்கு வாங்கி தனது கட்சியில் சேர்த்துக் கொள்வதும் பா.ஜ.க. கையாளும் இன்னொரு யுக்தியாகவே உள்ளது.

## எதிர்க்கட்சிகளின் காரியவாதமும் ஒற்றுமையின்மையும்

மோடிக்கு எதிராக இந்திய அளவில் செல்வாக்கு பெற்ற தலைவர் இல்லாத நிலையில், எதிர்க்கட்சிகளுக்கு இருந்த ஒரே வழி, எதிர்க்கட்சிகளிடையிலான ஒற்றுமையும், தேர்தலுக்கான நிலைப்பாடுமாகும். ஆனால், அதற்காக காங்கிரசு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் போராட்டம் நிகழ்த்த வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது.

2023 மே மாதத்தில் நடந்த கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசு வெற்றி பெற்றதை அடுத்து, மோடி-அமித்ஷா கும்பலுக்கு தோல்வி பயம் அதிகரித்தது. அதனைத் தொடர்ந்து காங்கிரசு, தி.மு.க., ஆம் ஆத்மி போன்ற எதிர்க்கட்சிகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட “இந்தியா” கூட்டணியை எதிர்கொள்வதே மோடி கும்பலுக்கு பெரும்பாடாக இருந்தது.

ஒவ்வொருமுறை "இந்தியா" கூட்டணியின் கூட்டம் தொடர்பான செய்திகள் மக்களுக்குச் சென்று சேர்ந்துவிடாமல் தடுப்பதிலேயே குறியாக இருந்தது, மோடி-அமித்ஷா கும்பல். அதேவேளையில், பா.ஜ.க. ஆதரவு சங்கி ஊடகங்களும் ராகுல் காந்தி மேற்கொண்ட "பாரத் ஜோடோ" நடைபயணத்தைப் பற்றி அவதூறுகளையும் பொய்களையும் பரப்பி சீர்குலைக்க முயற்சித்தன.

ஆனால், "இந்தியா" கூட்டணி கட்சிகளோ 2023 நவம்பர் மாதத்தில் நடந்து முடிந்த ஐந்து மாநிலங்களின் சட்டமன்றத் தேர்தல்களில் தனித்தனியாகப் பிரிந்து பா.ஜ.க.வை எதிர்கொண்டன. இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மாநிலங்களில் பா.ஜ.க. வெற்றி பெற்றதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.

இந்த ஐந்து மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கான தேர்தலில் காங்கிரசுக்கு ஏற்பட்ட பின்னடைவைத் தொடர்ந்து, "இந்தியா" கூட்டணியை உருவாக்கிய நிதிஷ் குமார் அக்கூட்டணியில் இருந்து வெளியேறி பா.ஜ.க.வுடன் இணைந்தார்; ஆம் ஆத்மி கட்சி, திரிணாமுல் காங்கிரசு கட்சி ஆகியவற்றுடன் தொகுதி உடன்பாடு எட்டவில்லை; அக்கட்சிகள் கூட்டணியில் நீடிக்குமா என்ற நிலைமை உருவானது.

அதுவரை, "இந்தியா" கூட்டணி மிகப்பெரும் வெற்றி பெறும் எனக் கூறிவந்த, தி.மு.க. ஆதரவு ஊடகங்கள், "தென்னிந்தியாவில் மோடி-அமித்ஷாவால் வெற்றி பெற முடியாது" என குரலை மாற்றிப் பேசத் தொடங்கின.

கூட்டணிகள் அமைவதுதான் வெற்றிக்கு அடிப்படை என்று அரசியல் கட்சிகள் குறிப்பிட்டாலும், "இந்தியா" கூட்டணியானது, பிப்ரவரி மாத இறுதியில்தான் மீண்டும் செயல்படத் தொடங்கியது. நாடும் மக்களும் எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகள், கோரிக்கைகள் தொடர்பாக "இந்தியா" கூட்டணி கட்சிகள் மத்தியில் எந்த விவாதமும் இதுவரை நடக்கவில்லை. கூட்டணி பேரம் முடிந்துவிட்டால் போதும் என்று கருதுகின்றன. ஒவ்வொரு கட்சியும் தனித்தனியாக தத்தமது தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. மொத்தத்தில், தொகுதிப் பங்கீடு முடிந்துவிட்டால் போதும், மோடி எதிர்ப்பலையைப் பயன்படுத்தி தேர்தலில் வெற்றி பெறுவதை மட்டுமே "இந்தியா" கூட்டணியினரின் ஒரே அணுகுமுறையாக உள்ளது.

மேற்கண்ட காரணங்களால், பா.ஜ.க.வை தேர்தலில் வீழ்த்துவது என்பது மிகவும் கடினமான பணியாகவே உள்ளது.

★★★

# தேர்தலில்
# பாசிச
# பா.ஜ.க.வை
# வீழ்த்துவது
# எப்படி?

**இது மக்களின் கவலை!**

தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்துவது எப்படி என்பது மக்களின் கவலை. அந்தவகையில்தான், நாம் இந்தக் கேள்வியை எழுப்புகிறோமே தவிர, தேர்தல் அரசியல் கட்சிகளின் ஆட்சியைப் பிடிப்பதற்கான கண்ணோட்டத்தில் இருந்து இந்தக் கேள்வியை நாம் எழுப்பவில்லை.

தேர்தல் கட்சிகளின் கண்ணோட்டத்தில் இருந்து பார்ப்பவர்களுக்கு, இந்தக் கேள்வி புதிய விசயமாகத் தோன்றாமல் இருக்கலாம்.

பா.ஜ.க. எதிர்ப்புணர்வு கொண்ட பலரும், பா.ஜ.க.வை தேர்தலில் வீழ்த்த வேண்டுமென்றால், "இந்தியா" கூட்டணியை வெற்றிப் பெறச் செய்ய வேண்டும் என்பதுதான் இயல்பான (default) தீர்வாகக் கருதிக் கொண்டிருக்கும் போது, இந்தக் கேள்விக்கு வேறென்ன பதில் இருக்க முடியும் என்று கூட தோன்றலாம்.

"இந்தியா" கூட்டணி கட்சியினரிடம் பல முரண்பாடுகள் இருந்தாலும், பல குறைபாடுகள் இருந்தாலும் பா.ஜ.க.வை வீழ்த்துவதற்கு "இந்தியா" கூட்டணி மட்டும்தான் களத்தில் உள்ள பலமான எதிர்ப்பணியாகும். அதனை ஆதரிப்பதுதான், பா.ஜ.க.வை தேர்தலில் வீழ்த்துவதற்கு வழி வகுக்கும் என்றும் கருதலாம்.

ஆனால், பா.ஜ.க.வை வீழ்த்துவது என்பது, பத்தாண்டு காலத்தில் பா.ஜ.க. உருவாக்கியுள்ள மக்கள் விரோத சட்ட திட்டங்களிலிருந்தும் சமூகம் பாசிசமயமாக்கப் பட்டிருப்பதிலிருந்தும் மீண்டெழுவதுதான். அந்தவகையில், ஒரு மாற்று கொள்கையும் அதற்கான நடவடிக்கையை மட்டுமே மக்கள் எதிர்ப்பார்க்கின்றனர். அந்தவகையிலான ஒரு நம்பிக்கை உழைக்கும் மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில், "இந்தியா" கூட்டணி கட்சியினர் இதுவரை நடந்து கொள்ளவில்லை.

"இந்தியா" கூட்டணியில் உள்ள பல கட்சிகள் தங்களது தேர்தல் நலனிற்காக பா.ஜ.க.வுடன் கடந்த காலத்தில் கூட்டணி வைத்த கட்சிகள்தான். தற்போது பா.ஜ.க.வை எதிர்ப்பதாகக் கூறுகின்ற, சனாதன எதிர்ப்பைப் பேசுகின்ற, தி.மு.க. கூட்டணியில் இருக்கின்ற கட்சிகள் தான், 2016 தமிழ்நாட்டின் சட்டமன்றத் தேர்தலின் போது, அ.தி.மு.க.வின் "பி டீம்"மாக செயல்பட்டவை; "கழங்கங்கள் இல்லாத தமிழ்நாடு" என்ற முழக்கத்தை முன்வைத்து தி.மு.க. தோல்வியடைவதற்கு காரணமானவை.

இன்று, "இந்தியா" கூட்டணியில் இருக்கும் சிவசேனா, ம.தி.மு.க., கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சி போன்றவை தான் 2014-இல் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்து மோடி ஆட்சிக்கு வருவதற்கும் காரணமானவை என்பதையும் மக்கள் மறக்கவில்லை.

மேலும், இக்கட்சிகள் அனைத்தும் தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற மறுகாலனியாக்கக் கொள்கையை ஏற்றுக்கொண்டு தங்களது மாநிலத்தில் தீவிரமாக நடைமுறைப்படுத்துகின்ற கட்சிகள்தான். அதனால்தான், மேல்மா சிப்காட் எதிர்ப்புப் போராட்டம், பரந்தூர் விமான நிலையம் எதிர்ப்புப் போராட்டம் முதல், டெல்லி விவசாயிகள் போராட்டம் வரையிலும் எதிலும் தேர்தல் அரசியல் கட்சிகளை மக்கள் சேர்த்துக் கொள்வதில்லை.

ஓட்டுக் கட்சிகள் போராட்டங்களை உடைத்துவிடுவார்கள்; சரியான சந்தர்ப்பத்தில் மக்களைக் கைவிட்டுவிடுவார்கள்; இவர்கள் எதிர்க்கட்சியாக இருக்கும் வரை மக்களுடன் சேர்ந்து எதிர்ப்பது போல நடிப்பார்கள், தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைத்துவிட்டால் இவர்களே முன்னின்று மக்கள் விரோத சட்ட திட்டங்களை நடைமுறைப் படுத்துவார்கள் என்று மக்கள் தேர்தல் அரசியல் கட்சிகளைப் பற்றி நன்குணர்ந்துள்ளனர். இதற்கு பா.ஜ.க. கூட்டணி கட்சிகளாக இருந்தாலும் சரி, "இந்தியா" கூட்டணி கட்சிகளாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியும் விதிவிலக்கல்ல என்பதுதான் எதார்த்த நிலையாகும். நாளையே பெட்டி கொடுத்தாலோ, சீட்டுக் கொடுத்தாலோ கட்சி மாறுவார்கள், கூட்டணி மாறுவார்கள் என்று மக்கள் கருதுகின்றனர்.

ஜனவரி மாதம் வரை சீட்டு பேரம் ஒத்துவரவில்லை என்பதற்காக கூட்டணியே நீடிக்குமா என்ற நிலைமை “இந்தியா” கூட்டணியில் நிலவியது. “இந்தியா” கூட்டணி கட்சிகள் எந்தக் கொள்கை வேறுபாடும் இல்லாதவர்கள், பா.ஜ.க. எதிர்ப்புணர்வை அறுவடை செய்து அதிகாரத்தில் பங்கு போட்டுக் கொள்ள காத்திருப்பவர்கள், இவர்களை நம்ப முடியாது என்பதுதான் மக்களின் மனநிலையாகும்.

மக்களுக்குத் தேவை, கவர்ச்சிகரமான வெற்று வாக்குறுதிகள் அல்ல. பாசிச பா.ஜ.க.வின் இந்துராஷ்டிரத்திற்கு மாறான, மாற்றுக் கொள்கையும் திட்டமும் அதனை அடைவதற்கான நடவடிக்கைகளும்தான்.

ஆகையால், பா.ஜ.க.வை தேர்தலில் வீழ்த்துவது எப்படி என்பது மக்களின் கவலையாகும். ஜனநாயக சக்திகள் “இந்தியா” கூட்டணிக்கு வாக்களிக்கலாம் என்று நம்புவதைப் போல மக்கள் இக்கூட்டணியினரை நம்ப வேண்டுமெனில், என்ன செய்ய வேண்டும் என்பதுதான், பா.ஜ.க.வை தேர்தலில் வீழ்த்துவதில் அடங்கியுள்ளது.

## மக்களுக்குத் தேவை கவர்ச்சி வாக்குறுதிகள் அல்ல, மாற்றுக் கொள்கையும் அதற்கான நடவடிக்கைகளுமே!

காங்கிரசின் சசிகாந்த் செந்தில் தங்களது கட்சியினருக்கு தொடர்ந்து வகுப்பெடுக்கிறார். மக்களின் பிரச்சினைகளைப் பேசி வாக்குசேகரிக்க வேண்டும் என்றும், வீடுவீடாக சென்று பிரச்சாரம் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். ஆனால், மக்களுக்கு தேவை கவர்ச்சிகரமான வாக்குறுதிகள் அல்ல. மக்கள் வாக்குறுதிகளை எதிர்ப்பார்க்கவில்லை.

சான்றாக, பிப்ரவரி மாதம் டெல்லியை முற்றுகையிட்டு பஞ்சாப்-ஹரியானா விவசாயிகள் குறைந்தப்பட்ச ஆதாரவிலையைக் கோரி போராட்டத்தில் இறங்கிய போது, எதிர்க்கட்சிகளான கம்யூனிஸ்டுகள், காங்கிரசு, தி.மு.க. என எந்தக் கட்சியும் பா.ஜ.க.விற்கு எதிராக விவசாயிகளை ஆதரித்துப் போராட்டத்தில் இறங்கவில்லை. இது அப்பட்டமான சந்தர்ப்பவாதம் இல்லையா? இவ்வாறு விவசாயிகளை ஆதரித்து களத்தில் இறங்காத எதிர்க்கட்சிகளை மக்கள் எப்படி நம்புவார்கள்.

ஆகையால், மக்களுக்குத் தேவை, கவர்ச்சிகரமான வெற்று வாக்குறுதிகள் அல்ல, மக்கள் போராடும் போது அவர்களுக்கு நேரடியாக ஆதரவு

தெரிவிக்கும் நடவடிக்கைகளைத்தான் மக்கள் எதிர்ப்பார்க்கிறார்கள். மேலும், பாசிச பா.ஜ.க.வின் இந்துராஷ்டிரத்திற்கு மாறான, மாற்றுக் கொள்கையும் திட்டமும் அதனை அடைவதற்கான நடவடிக்கைகளையும் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

பா.ஜ.க.வை எதிர்ப்பதாக தி.மு.க. கூட்டணியினர் கூறுகின்றனர். அண்மையில், போதைப் பொருள் கடத்தில் விவகாரத்தில் தி.மு.க.வின் ஜாபர் சாதிக்கை கைது செய்ததன் மூலம் தமிழ்நாடு போதை மாநிலமாக இருப்பதாக பா.ஜ.க.-அ.தி.மு.க.வினர் பிரச்சாரம் செய்தனர். அ.தி.மு.க.வினர் தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியதன் மூலம் ஓட்டு அறுவடைக்கு இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்த முயற்சித்தனர். ஆனால், பா.ஜ.க.வின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்காக தி.மு.க.வும் அதன் கூட்டணி கட்சிகளும் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் எத்தனை? செய்த போராட்டங்கள் தான் எவை?

மணிப்பூரில் குக்கி இன மக்கள் மீது இனப் படுகொலை அரங்கேற்றிய போது, நாடு தழுவிய பந்த் அறிவித்து வீதியில் இறங்கி போராடினார்களா? தமிழ்நாட்டிற்கு வெள்ள நிவாரணம் வழங்க மறுத்த மோடி-நிர்மலா கும்பலைக் கண்டித்து தி.மு.க. ஆர்ப்பாட்டங்கள் செய்ததா? தமிழ்நாட்டிலிருந்து ஆறு லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் ஜி.எஸ்.டி. வரியை வசூலித்துவிட்டு அதில் 26 சதவிகிதம் மட்டுமே தமிழ்நாட்டிற்கு திருப்பித் தந்ததே பா.ஜ.க., அதற்கெதிராக தி.மு.க. போராட்டத்தில் இறங்கியதா? தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பும் பெரும்பாலான தீர்மானங்களை தடுத்து நிறுத்தி தமிழ்நாட்டிற்கு எதிராக செயல்படுகிறாரே ஆர்.எஸ்.எஸ்.யின் உளவாளி ரவி, அவருக்கு எதிராக தமிழ்நாட்டில் ஒரு போராட்டமாவது செய்ததா? இப்படி தமிழ்நாடு வஞ்சிக்கப்படும் எத்தனையோ நிகழ்வுகள் நடந்தேறின, எதிலும் தி.மு.க. போராட்டத்தில் ஈடுபடவில்லை.

ஆகையால், மீண்டும் ஒருமுறை தெளிவாகக் குறிப்பிடுகிறோம். மக்கள் எதிர்பார்ப்பது கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை அல்ல, நடவடிக்கைகளை.

இன்னொரு விசயத்தைப் பாருங்கள், டெல்லி விவசாயிகளின் கோரிக்கையான, குறைந்தபட்ச ஆதார விலையை ஏற்றுக்கொண்டு தேர்தல் வாக்குறுதியாக ஆம் ஆத்மி கட்சி கொடுத்ததால்தான், பஞ்சாப் சட்டமன்றத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி வெற்றி பெற்றது. ஆனால், இன்றுவரை குறைந்தபட்ச ஆதாரவிலையை அது நடைமுறைப்படுத்தவில்லை. தற்போது பிப்ரவரி 12-ஆம் தேதி டெல்லியை முற்றுகையிட்டு விவசாயிகள் போராடுவதற்கு முன்னதாக காங்கிரசு கட்சி தனது தேர்தல் வாக்குறுதியாகக் கூட குறைந்தபட்ச ஆதாரவிலையைக் குறிப்பிடவில்லை.

இந்தப் போராட்டம் உருவான பின்னர் கூட "இந்தியா" கூட்டணி கட்சியினர் ஆட்சி செய்யும் எந்த மாநில அரசுகளும் தங்களது மாநிலங்களில் (பஞ்சாப், மேற்கு வங்கம், கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு...) குறைந்தபட்ச ஆதாரவிலையை சட்டமாக ஆக்கி, தங்களது மாநில சட்டமன்றங்களில் தீர்மானங்களை நிறைவேற்றவில்லை.

**தேர்தல் நேரக் கட்டுப்பாடுகள் எல்லாம் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுக்கும் ஆட்சியாளர்களுக்கும்தான், மக்களுக்கு அல்ல. தேர்தல் நடக்கிறது அதனால் போராடக் கூடாது என்பதெல்லாம், உழைக்கும் மக்களை ஒடுக்குகின்ற சர்வாதிகாரமாகும்.**

இதைப்போலவே, ஸ்டெர்லைட்டை மூடுவதற்கு தனிச்சட்டம் இயற்றுவோம், ஸ்டெர்லைட் போராட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்த தி.மு.க.வோ அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. நீட்-க்கு தடைவிதிப்போம் என்று வாக்குறுதி கொடுத்த தி.மு.க., அ.தி.மு.க.வைப் போலவே சட்டமன்றங்களில் தீர்மானங்களை நிறைவேற்றுவதைத் தாண்டி, கண்துடைப்புக்கு ஒரு சில அடையாளப் போராட்டங்களை நடத்தி முடித்துக் கொண்டது.

அதனால், மக்களுக்கு தேவை வெற்று கவர்ச்சிகரமான வாக்குறுதிகள் அல்ல, மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் நடவடிக்கைகள், பா.ஜ.க.விற்கு எதிரான மக்கள் போராட்டங்களுக்கு நேரடி ஆதரவு போன்றவற்றையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்தக் காரணங்களால்தான் தமிழ்நாட்டின் போக்குவரத்து தொழிலாளர்கள், தற்காலிக ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், மாற்றுத் திறனாளிகள் போன்ற பல்வேறு பிரிவினர், தி.மு.க. கூட்டணி கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று போராட்டத்தில் இறங்கினர். அவர்கள் மீது அடக்குமுறை செலுத்தியதைத் தவிர தி.மு.க. அரசு இன்றுவரை அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை. இதனை என்னவென்று சொல்வது?

எட்டுவழிச் சாலைக்கு எதிராக போராடுபவர்கள் மீது போலீசைக் கொண்டு ஒடுக்கியது அ.தி.மு.க. அரசு. அன்று அதற்கெதிராக குரல் கொடுத்த தி.மு.க., இன்று மேல்மா விவசாயிகள் மீது குண்டர் சட்டத்தை ஏவியது. இந்த அடக்குமுறையை என்னவென்று சொல்வது?

கல்வியை கார்ப்பரேட் மயமாக்குவது, பள்ளிக் கல்வியை கொஞ்சம் கொஞ்சமாக ஒழிக்கும் தி.மு.க. அரசுக்கு எதிராக குரல் கொடுத்த ஆசிரியரும் கல்வி செயல்பாட்டாளருமான உமா மகேஷ்வரியை தடாலடியாக இடைநீக்கம் செய்து அடக்குமுறையை ஏவியது. இது போன்று, கிரானைட் கொள்ளை, மணல் கொள்ளை போன்றவற்றிற்கு எதிராக போராடுபவர்கள் மீது அடக்குமுறை ஏவுவதை என்னவென்று சொல்வது?

ஆகையால், தேர்தல் நேரத்தில் பாசிசத்தை வீழ்த்துவோம், பா.ஜ.க.வை வீழ்த்துவோம் என்று சொன்னாலும் சரி, கவர்ச்சிகரமான வாக்குறுதிகளைக் கொடுத்தாலும் சரி மக்கள் அவற்றை நம்பத் தயாராக இல்லை.

மக்களுக்குத் தேவை தேர்தல் நேர வாக்குறுதிகள் அல்ல, ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க.விற்கு எதிரான சரியான மாற்று கொள்கையும் அதற்கான நடவடிக்கைகளும் தான்.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்டது, இந்த நேரத்தில் மாற்று கொள்கைகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்க முடியுமா? என்று சிலர் கேட்கலாம்.

இப்போதுதான் இதனைப் பற்றி பேச முடியும், இப்போது பேசினால்தான் அனைத்து கட்சிகளும் கவனம் கொடுப்பார்கள்; இப்போது பேசினால்தான் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று மக்கள் நன்குணர்ந்துள்ள காரணத்தால்தான், தேர்தல் நெருங்கும் போது தங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொடுக்குமாறு மக்கள் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

மேலும், தேர்தல் நேரக் கட்டுப்பாடுகள் எல்லாம் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுக்கும் ஆட்சியாளர்களுக்கும்தான், மக்களுக்கு அல்ல. தேர்தல் நடக்கிறது அதனால் போராடக் கூடாது என்பதெல்லாம், உழைக்கும் மக்களை ஒடுக்குகின்ற சர்வாதிகாரமாகும்.

ஆகையால், தேர்தல் நேரத்தில்தான் இவற்றையெல்லாம் பேச முடியும், அவசியம் பேச வேண்டும்.

★★★

# அரசியல் மாற்றும் மக்கள் எழுச்சியும் உடனடி தேவைகளாகும்!

2014-க்கு முன்பு மன்மோகன் சிங் அரசு நடைமுறைப்படுத்திய அதே கொள்கைகளைத்தான் இன்று பா.ஜ.க. அரசும் நடைமுறைப்படுத்தி வருகிறது. மன்மோகன் சிங் அரசு மேற்கொண்ட மக்கள் விரோத சட்ட திட்டங்களை மேலும் தீவிரமாக நடைமுறைப்படுத்தியும் வருகிறது. நாடாளுமன்றத்தை கைகழுவிவிட்டு தனக்கிருக்கும் பெரும்பான்மையை வைத்து விரும்பிய சட்டங்களை இயற்றும் அதே வழிமுறையைப் பின்பற்றித்தான், பா.ஜ.க.வும் காவிமயமாக்கத்தையும் அம்பானி, அதானி, அகர்வால் போன்ற கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவாக சட்ட திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது. மொத்தத்தில், இந்த போலி ஜனநாயகம் வழங்கியிருக்கும் சட்டபூர்வ வழிமுறைகளைப் பின்பற்றிதான், பாசிசமும் அரங்கேறி வருகிறது.

ஆகையால், பாசிச பா.ஜ.க.வை எதிர்க்கின்ற எதிர்க்கட்சிகளோ, மாற்று அரசியல்-பொருளாதாரத் திட்டங்கள் எவற்றையும் முன்வைக்காமல், மக்களிடம் எழுந்துள்ள பா.ஜ.க. எதிர்ப்பலையைப் பயன்படுத்தி அந்தவகையில் மக்கள் முன்னால் இருக்கும் பிரச்சினைகளை மட்டும் பேசி கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை வழங்கினர்.

சான்றாக, சமையல் எரிவாயு உருளை விலையைக் குறைப்பதாக அனைத்து கட்சிகளும் தேர்தல் வாக்குறுதிகளாக அறிவிக்கின்றன; இலவசமாக சமையல் எரிவாயு உருளை வழங்குவதாகவும் தெரிவிக்கின்றன. ஆனால், சமையல் எரிவாயுக்கு அரசு வழங்கி வந்த மானியங்களை மீண்டும்

**மக்களுக்குத் தேவைக் கார்ப்பரேட் அரசியல் அல்ல. மக்களிடம் நிலவுவது வெறும் பாசிச பா.ஜ.க. எதிர்ப்பு, மோடி எதிர்ப்பலை மட்டுமல்ல, இந்த அரசியல் அமைப்பின் மீதான எதிர்ப்பலையும், கார்ப்பரேட் அரசியலின் எதிர்ப்பலையுமாகும்.**

வழங்குவதன் மூலம் செய்யப்போவதில்லை. ஏனென்றால், உணவுப் பொருட்கள், சுகாதாரம், மருத்துவம், கல்வி உள்ளிட்ட மக்கள் நலன் சார்ந்த விசயங்களுக்கு வழங்கிவந்த மானியங்களையும் ஒதுக்கி வந்த நிதிகளையும் வெட்ட வேண்டும் என்பது உலக வர்த்தகக் கழகத்தின் (WTO-வின்) உத்தரவு. இந்த உத்தரவுக்கு கட்டுப்படும் அதேவேளையில், இதனால், மக்களிடம் அதிருப்தி வளர்கிறது என்பதால், தற்காலிகமாக விலையைக் குறைப்பதாக அறிவிப்பதையும், இலவசமாக வழங்குவதாக அறிவிப்பதையும் தான் கவர்ச்சி வாக்குறுதிகள் என்று குறிப்பிடுகிறோம். மாறாக, கொள்கை ரீதியாக, உ.வ.க.வில் இருந்து வெளியேறுவோம் என்று எதிர்க்கட்சிகள் அறிவிக்க வேண்டும்.

டெல்லியில் குறைந்தபட்ச ஆதாரவிலை கேட்டுப் போராடும் விவசாயிகள், “இந்திய அரசே, உலக வர்த்தகக் கழகத்தில் இருந்து வெளியேறு” என்று முழங்கி வருகின்றனர். இத்துடன், விவசாயத்திற்கான மானியங்களை வழங்குதல், விவசாய இடு பொருட்களில் கார்ப்பரேட் கம்பெனிகளின் ஆதிக்கத்தைத் தடுத்தல், விவசாயக் கட்டமைப்பை சீரழிக்கும் வகையிலான ரியல் எஸ்டேட் உள்ளிட்ட கார்ப்பரேட் திட்டங்களைக் கைவிடுதல் போன்றவை எல்லாம் தான் விவசாயிகளின் எதிர்ப்பார்ப்புகளாகும். இவற்றைப் பற்றி எந்த எதிர்க்கட்சிகளும் வாயைத் திறப்பதில்லை.

மாறாக, விவசாயிகள் எந்தப் பிரச்சினைக்காகப் போராடுகிறார்கள் என்று தெரிந்து கொண்டு அந்த விசயத்தை மட்டும் தங்களது வாக்குறுதிகளாக முன்வைக்கின்றனர்.

இந்த அணுகுமுறையெல்லாம், கார்ப்பரேட் கொள்கைகளை ஆதரித்துக் கொண்டே மக்கள் வாக்குகளை அறுவடை செய்து கொள்ளும் அரசியலாகும். இதில் பா.ஜ.க. பாசிசத்தைப் பின்பற்றுகிறது, எதிர்க்கட்சிகளோ சமூக நீதியைப் பின்பற்றுவதாகக் கூறுகின்றன. அதனால்தான், இதனை மக்கள் நம்புவதற்குத் தயாராக இல்லை.

ஆகையால், மக்களுக்குத் தேவை, கார்ப்பரேட் அரசியல் அல்ல. மக்களிடம் நிலவுவது வெறும் பாசிச பா.ஜ.க. எதிர்ப்பு, மோடி எதிர்ப்பலை

மட்டுமல்ல, இந்த அரசியல் அமைப்பின் மீதான எதிர்ப்பலையும் கார்ப்பரேட் அரசியலின் எதிர்ப்பலையுமாகும். அந்தவகையில், சரியான மாற்று அரசியல்-பொருளாதாரத் திட்டமும் அதனை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு செல்லும் வழிமுறையும் முன்வைத்தாக வேண்டும். இதுதான் மக்களுக்கான அரசியல்!

### பா.ஜ.க.வின் தோல்வி முகம்!

பத்தாண்டுகளில், நமது நாட்டில் உழைக்கும் மக்களுக்கு எதிராகவும் எதிர்க்கட்சிகளுக்கு எதிராகவும் பா.ஜ.க. பல்வேறு பாசிச நடவடிக்கைகளை அரங்கேற்றி வந்துள்ளது. பணமதிப்பிழப்பு நடவடிக்கை, காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து, ஜி.எஸ்.டி., தொழிலாளர் நலச்சட்டங்கள் திருத்தம், சுற்றுச்சூழல் சட்டங்கள் திருத்தம், பள்ளிப் பாடங்களை இந்துத்துவமயமாக்குவது, இசுலாமியர்களுக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகள் என பெரும் பட்டியலே நீள்கிறது.

மோடி கும்பலின் முதல் ஐந்தாண்டு ஆட்சி காலத்தில் அது பல்வேறு மக்கள் விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தாலும், மக்கள் மோடி ஆட்சியை வெறுத்தாலும் 2019-இல் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது, மோடி கும்பல்.

இதற்கு முன்னர், எட்டுவழிச் சாலை, மீத்தேன், நியூட்ரினோ, ஹைட்ரோகார்பன் திட்டங்களுக்கு எதிராகவும் நீட், புதிய கல்விக் கொள்கை போன்றவற்றிற்கு எதிராகவும் தமிழ்நாடு மக்கள் பல போராட்டங்களை நடத்தி வந்தனர். இதுமட்டுமின்றி, 2017 ஜல்லிக்கட்டுப் போராட்டம் மோடி அரசுக்கு நேரடியாக சவால்விட்ட போராட்டமாகும். அது தமிழ்நாட்டு மக்களின் உணர்வை மட்டுமே பிரதிபலித்தது. அதன் பின்னர் ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டமும் துப்பாக்கிச் சூடும் தமிழ்நாட்டு மக்களின் போராட்ட உணர்வை அதிகரித்தது. அதனால், தமிழ்நாட்டில் பா.ஜ.க. கூட்டணி படுதோல்வியடைந்தது. இதைப்போலவே, நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு மக்கள் போராட்டங்கள் நடந்திருந்தாலும், நாடு தழுவிய மக்கள் போராட்ட அலை வீசவில்லை.

இந்நிலையில், 2019-இல் மோடி கும்பல் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன், ஜூன் மாதத்தில் முத்தலாக் தடை விதிப்பு; ஆகஸ்டு மாதத்தில் காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து; செப்டம்பர் மாதத்தில் ஃபரூக் அப்துல்லா உள்ளிட்ட காஷ்மீர் எதிர்க்கட்சி தலைவர்களுக்கு வீட்டுச் சிறை; நவம்பர் மாதத்தில் பாபர் மசூதி நிலம் விவகாரத்தில், உச்சநீதிமன்றம் ஆர்.எஸ்.எஸ்.க்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கியது - என அடுத்தடுத்து பல

**ஓராண்டுக்கும் மேலாக உறுதியாக நடந்த விவசாயிகளின் டெல்லி முற்றுகைப் போராட்டம்தான், மோடி–அமித்ஷா கும்பலை தோல்வி முகத்தை நோக்கித் திருப்பியது.**

பாசிச நடவடிக்கைகளை மேற்கொண்டு ஏறித்தாக்கி வந்தது மோடி-அமித்ஷா கும்பல்.

இதன் தொடர்ச்சியாக, 2019 டிசம்பரில் நாடாளுமன்றத்தில் தேசிய குடியுரிமை சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டது. அதுவரை நாடு தழுவிய பெரிய அளவிலான மக்கள் போராட்டங்கள் இல்லாமல், தனது விருப்பம் போல பாசிச நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த பா.ஜ.க.விற்கு எதிராக, ஷாகின்பாக் மக்கள் போராட்டங்கள் நாடு முழுவதும் கிளம்பிவிட்டன.

நாடெங்கும் இசுலாமியப் பெண்கள் ஷாகின்பாக் போராட்டத்தில் இறங்கினர். இந்தப் போராட்டங்களுக்கு நாட்டின் அனைத்து பிரிவு மக்களிடம் ஆதரவு கிடைத்தது. இந்தப் போராட்டம்தான் மோடி-அமித்ஷா கும்பலின் வெற்றி முகத்தைத் தடுத்து நிறுத்தியது. எனினும், மோடி-அமித்ஷா கும்பல் இதனை உணராமல் மேலும் அடுத்தடுத்த தாக்குதல்களைத் தொடுத்தது.

இவற்றின் தொடர்ச்சியாக, அது கொண்டுவர இருந்த மூன்று வேளாண் சட்டங்கள் என்ற பாசிச நடவடிக்கையானது, ஒரு கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளை வீதிக்குக் கொண்டுவந்தது; பஞ்சாப், ஹரியானா, இராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட பல வடமாநிலங்களில் விவசாயிகள் போர்க்கோலம் பூண்டனர். இந்தப் போராட்டங்களை ஆதரித்து நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் மட்டுமின்றி, தொழிலாளர்கள், ஜனநாயக சக்திகளும் போராட்டத்தில் குதித்தனர். இந்திய விவசாயிகளின் இந்தப் போராட்டத்தை உலகமே திரும்பிப் பார்த்தது.

ஓராண்டுக்கும் மேலாக உறுதியாக நடந்த விவசாயிகளின் டெல்லி முற்றுகைப் போராட்டத்திற்கு பாசிச மோடி-அமித்ஷா கும்பல் அடிபணிந்து மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற்றதை உலகமே கண்டது.

இந்தப் போராட்டம்தான், மோடி-அமித்ஷா கும்பலை தோல்வி முகத்தை நோக்கித் திருப்பியது.

### தேர்தல்களில் வெற்றியைத் தீர்மானித்தது எது?

பண மதிப்பிழப்பு நடவடிக்கை, ஜி.எஸ்.டி. போன்ற பல மக்கள் விரோதத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருந்தாலும் 2019-இல் மோடி கும்பல்

மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியதற்கு காரணங்கள் என்னென்ன? எல்லா மாநிலங்களிலும் மக்கள் மத்தியில் எதிர்ப்புகள் இருந்த போதிலும் மோடி தலைமையில் பா.ஜ.க. மீண்டும் வெற்றி பெற்றது ஏன்?

பா.ஜ.க.வின் தேர்தல் முறைகேடுகள், மின்னணு வாக்குப் பதிவில் தில்லுமுல்லு செய்தது ஆகியவைதான் இதற்கு காரணம் என்று சிலர் தெரிவித்தனர். இது ஒன்றே காரணமல்ல, பா.ஜ.க. ஆளும் சில மாநிலங்களில் குறிப்பிட்ட அளவு முறைகேடுகள் நடந்திருந்தாலும், தென்மாநிலங்களில் பா.ஜ.க. பின்னடைவைச் சந்தித்தது.

சிலர், தேர்தல் கமிஷன் பா.ஜ.க.வின் ஏஜெண்டாக செயல்பட்டது என்று குறிப்பிடுகின்றனர். இது முழு முதல் உண்மைதான் எனினும், அது மட்டுமே மோடி கும்பல் வெற்றி பெற்றதற்கு அடிப்படை காரணமல்ல.

இவையெல்லாம், மோடி கும்பல் வெற்றி பெறுவதற்கு முக்கிய பங்காற்றியிருந்தாலும், இவற்றைவிட முதன்மையான காரணம், “அரசியல் களம்”.

பா.ஜ.க.வை தொடர்ந்து அம்பலப்படுத்துவது பா.ஜ.க.வை தேர்தல் களத்தில் வீழ்த்துவதற்கு அவசியமானது, அடிப்படையானது எனினும், அது பா.ஜ.க.வின் தோல்வியைத் தீர்மானிக்கும் காரணி அல்ல.

மேலும், பா.ஜ.க. வெற்றிபெறுவதற்கு அது ஆகப் பெரும்பான்மையான மக்களின் ஆதரவைத் தொடர்ந்து தக்க வைத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை; ஆகப் பெரும்பான்மை மக்களிடம் பா.ஜ.க.விற்கு நற்பெயர் உருவாகியிருக்க வேண்டிய அவசியமும் இல்லை. துருக்கியில் பாசிச எர்டோகனை எடுத்துக் கொள்ளலாம். கொரானா ஊரடங்கு, பூகம்பம் ஆகியவற்றால் பல்லாயிரக்கணக்கான மக்கள் மரணம், அதனைத் தொடர்ந்து கடும் பொருளாதார நெருக்கடி போன்றவற்றால், எர்டோகன் ஆட்சி மக்களிடம் மிகவும் அம்பலப்பட்டு இருந்தது; எனினும், 2023-ஆம் ஆண்டில் நடந்த அதிபர் தேர்தலில், சிறு இழுபறி நிலைமை ஏற்பட்டாலும், எர்டோகன் மூன்றாவது முறையாக அதிபராக தேர்வு செய்யப்பட்டார்.

ஆகையால், ஆளுங்கட்சி அம்பலப்பட்டு போயிருந்தாலும், ஆகப் பெரும்பான்மை மக்களின் ஆதரவு இல்லாமல் இருந்தாலும் அது தேர்தலில் தோல்வியடைய வேண்டிய அவசியம் இல்லை.

ஆளும் கட்சி தோல்விமுகம் அடைந்திருப்பது, அத்துடன், தேர்தலில் எதிர்க்கட்சிகள் தங்களை ஒரு மாற்றாக முன்னிறுத்திக் கொள்வது ஆகிய இரண்டும் எந்த அளவிற்கு பொருத்தமாக அமைகிறதோ, அந்த அளவிற்கே, ஆளும் கட்சியினர் ஆட்சி அதிகாரத்தில் இருந்து வீசியெறியப்படுவதும், எதிர்க்கட்சிகள் வெற்றி பெறுவதும் சாத்தியமாகும்.

அந்தவகையில், 2019-இல் மோடிக்கு எதிராக மக்கள் போராட்டங்கள் நாடுதழுவிய அளவிற்கு எழவில்லை. அதேவேளையில், 2019-இல் ஆக பெரும்பான்மை மக்களிடம் பா.ஜ.க. மீது அதிருப்தி வளர்ந்திருந்தாலும், “வலிமையான தலைவர்”, “தேசத்தின் பாதுகாவலர்”, “வளர்ச்சி நாயகன்” என்று மோடி மீது கட்டமைக்கப்பட்டிருந்த பிம்பம் சுக்குநூறாக உடைக்கப்படவில்லை; மோடிக்கு நிகராக மாற்று தலைவராக எதிர்க்கட்சிகள் தங்களை முன்னிறுத்திக் கொள்ளவும் இல்லை.

**மோடி - பா.ஜ.க. எதிர்ப்பலை என்பது**
**காவி-கார்ப்பரேட் திட்டங்களுக்கு எதிரான அலை**

டெல்லியை முற்றுகையிட்டு விவசாயிகள் போராடிக் கொண்டிருந்த போதுதான், 2020 பிப்ரவரியில் நடந்த டெல்லி மாநில சட்டமன்றத் தேர்தலானது, ஆம் ஆத்மி கட்சிக்கு மிகப்பெரும் வெற்றியைக் கொடுத்தது.

தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டுப் போராட்டம், ஷாகின்பாக் போராட்டம், விவசாயிகளின் டெல்லி முற்றுகைப் போராட்டம் ஆகியவற்றிற்கு ஆதரவாக தமிழ்நாட்டில் நடந்த போராட்டங்கள் மட்டுமின்றி, நீட் தேர்வுக்கு எதிராக தமிழ்நாட்டு மக்களின் போராட்டம், சாத்தான் குளம் போலீசு கொட்டடி இரட்டை கொலைக்கு எதிரான போராட்டம்; எட்டுவழிச் சாலைக்கு எதிரான போராட்டம் என தமிழ்நாட்டில் வீசிய பா.ஜ.க., அ.தி.மு.க.விற்கு எதிரான போராட்ட அலைதான், 2019, 2021-இல் தி.மு.க. கூட்டணி அதிகமான இடங்களில் வெற்றி பெற்றதற்கு காரணம்.

2023-இல் கர்நாடகாவிலும், தெலுங்கானாவிலும் காங்கிரசின் வெற்றிக்குக் காரணம் ஆளும் கட்சிக்கு எதிரான மக்களின் போராட்டங்கள்தான்.

உண்மையில், பா.ஜ.க.விற்கு எதிராக தங்களை முன்னிறுத்திக் கொள்கின்ற எதிர்க்கட்சிகள் மக்கள் போராட்டங்களுக்கு முன்னிற்கவில்லை. மக்கள் போராட்டங்களால் உருவான பா.ஜ.க. எதிர்ப்பலையை பயன்படுத்திக் கொள்வதன் மூலமே எதிர்க்கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன என்பதே உண்மை!

ஆனால், எதிர்க்கட்சிகள் மக்களிடம் நிலவும் பா.ஜ.க. எதிர்ப்பலையை, மோடி எதிர்ப்பலையை ஒரு கட்சிக்கு எதிரான அலையாக சுருக்கிப் பார்க்கின்றனர். இதனால், தேர்தலில் வெற்றிபெற சரியான கூட்டணி அவசியம் என்று அனைத்துக் கட்சிகளும் கருதுகின்றன. கார்ப்பரேட் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தங்களுக்குள் ஒற்றுமையாக இருப்பதால்தான், எதிர்க்கட்சிகளால் கொள்கை அடிப்படையில் தேர்தலை

எதிர்கொள்ள இயலவில்லை. பா.ஜ.க. காவி பாசிசத்தை முன்வைக்கும் போது, அதனை எதிர்ப்பதாகக் கூறுவதை மட்டுமே எதிர்க்கட்சிகள் செய்கின்றன.

ஆனால், மோடி எதிர்ப்பலை என்பது, மோடி-அமித்ஷா கும்பலின் காவி-கார்ப்பரேட் பாசிச நடவடிக்கைகளுக்கு எதிரான மக்களின் உணர்வாகும். இதனால்தான், பா.ஜ.க.விற்கு எதிராக உறுதியாக நிற்கின்ற எதிர்க்கட்சிகளை மக்கள் வெற்றி பெற வைக்கின்றனர். ஆட்சிக்கு வரும் எதிர்க்கட்சிகளும் மக்கள் விரோத கார்ப்பரேட் திட்டங்களையே நடைமுறைப்படுத்துவது, ஊழல், முறைகேடுகளில் ஈடுபடுவது, உழைக்கும் மக்களின் போராட்டங்களை ஒடுக்குவது ஆகிய காரணங்களால் விரைவில் எதிர்க்கட்சிகளும் மக்கள் ஆதரவை இழந்துவிடுகின்றன.

**பா.ஜ.க.விற்கு எதிராக தங்களை முன்னிறுத்திக் கொள்கின்ற எதிர்க்கட்சிகள் மக்கள் போராட்டங்களுக்கு முன்னிற்கவில்லை. மக்கள் போராட்டங்களால் உருவான பா.ஜ.க. எதிர்ப்பலையை பயன்படுத்திக் கொள்வதன் மூலமே எதிர்க்கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன என்பதே உண்மை!**

### தோல்வி முகத்தில் பாசிச மோடி-அமித்ஷா கும்பல்!

மோடியைத் தவிர பா.ஜ.க.வில் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு தலைவர்கள் இல்லை; தொடர்ச்சியான மக்கள் விரோத நடவடிக்கைகளுக்காக அது மக்கள் மத்தியில் அம்பலப்பட்டு போயுள்ளது; இந்து மதவெறி நடவடிக்கைகளால், இந்துமுனைவாக்கம் நடந்திருந்தாலும், மக்கள் பிரச்சினைகளை முன்வைத்து அரசியலை முன்னெடுக்கும் போது வெற்றி பெற முடியும் என, சசிகாந்த் செந்தில் போன்ற காங்கிரசின் தேர்தல் வியூக வகுப்பாளர்கள் குறிப்பிடுகின்றனர். இது, காவி-கார்ப்பரேட் பாசிச நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியதால் ஏற்பட்ட பா.ஜ.க.விற்கு எதிரான மக்களின் உணர்வை தேர்தலில் ஓட்டு அறுவடை செய்யும் யுக்தியாகும்.

2020 இறுதியில், விவசாயிகளின் டெல்லி முற்றுகைப் போராட்டத்தால் உருவான மோடி-அமித்ஷா கும்பலின் தோல்வி முகம் இன்றளவும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. 2023 மே மாதத்தில் நடந்த ஐந்து மாநிலங்களுக்கான தேர்தல் வரையில் அது தொடர்ந்து சரிவை நோக்கிச்

**சரிந்து வந்த "இந்தியா" கூட்டணி உயிர் பெற்றதற்கு காரணமே, குறைந்தபட்ச ஆதார விலைக்கான விவசாயிகளின் டெல்லி முற்றுகைப் போராட்டம்தான்!**

சென்று கொண்டிருந்தது. இந்த சூழலில், எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கிய "இந்தியா" கூட்டணியைப் பார்த்து மோடி-அமித்ஷா கும்பல் அஞ்சி நடுங்கியது.

ஆனால், 2023 நவம்பரில் நடந்த ஐந்து மாநிலங்களுக்கான தேர்தலின் போது, எதிர்க்கட்சிகள் பிளவுபட்டு நின்றது மட்டுமின்றி, ஒரு மாற்று அரசியல் திட்டத்தை முன்வைக்காததாலும், கொடுத்த வாக்குறுதிகளை ஆட்சியில் இருக்கும் போது நடைமுறைப்படுத்தாததாலும் எதிர்க்கட்சிகளுக்கும் பாசிச கும்பலுக்கும் இடையிலான சமநிலையானது மாறியது. மோடி-அமித்ஷா கும்பல் மேல்கை எடுத்து எதிர்க்கட்சிகளுக்கு நெருக்கடி கொடுக்கத் தொடங்கியது. ஆனால், தோல்வி முகம் கொண்டிருந்த மோடி-அமித்ஷா கும்பலின் நிலைமை மாறவில்லை.

மக்களிடையே மோடி கும்பலுக்கு உருவாகியிருக்கும் எதிர்ப்பை எதிர்க்கட்சிகள் அறுவடை செய்துவிடாமல் தடுப்பதற்காக அடுத்தடுத்து திட்டமிட்ட நடவடிக்கைகளை மோடி கும்பல் மேற்கொண்டு வந்தது. அயோத்தியில் ராமர் கோவில் திறப்பு, அபுதாபியில் இந்து கோவில் திறப்பு, குடியரசு தினவிழா உரை, நாடாளுமன்றத்தில் பட்ஜெட் உரை என தொடர்ந்து எதிர்க்கட்சிகளை மட்டம்தட்டி, இழிவுப்படுத்தி வந்தது மோடி-அமித்ஷா பாசிசக் கும்பல்.

ஆனால், கிரிமினல் சட்டத்திருத்தத்திற்கு எதிரான லாரி ஓட்டுனர்களின் போராட்டம் மோடி கும்பலை பணிய வைத்தது; தற்போது குறைந்தபட்ச ஆதார விலைக்கான விவசாயிகளின் டெல்லி முற்றுகை போராட்டம் மோடி அரசை நிலைகுலையச் செய்துள்ளது; மணிப்பூரில் மக்கள் போராட்டங்கள் மெய்தி மக்களுக்கு உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையே திரும்பப் பெற வைத்தது; மகாராஷ்டிராவில் மாராத்தா சாதியினரின் இட ஒதுக்கீடு போராட்டம் மோடி கும்பலை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

இன்னும் சரியாக சொன்னால், சரிந்து வந்த "இந்தியா" கூட்டணி உயிர் பெற்றதற்கு காரணமே, குறைந்தபட்ச ஆதார விலைக்கான விவசாயிகளின் டெல்லி முற்றுகைப் போராட்டம்தான்!

## தேர்தல்: அரசியல் அதிகாரத்திற்கான போட்டியாகும்!

இந்தியாவில் அரசியல் கட்டமைப்பானது கார்ப்பரேட் கட்சிகள், கோடீஸ்வரர்கள் மட்டுமே தேர்தலில் பங்கேற்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் வகையில் அமைந்துள்ளது. கார்ப்பரேட் முதலாளிகளில் இருக்கும் பிரிவுகளுக்கேற்ப அரசியல் கட்சிகளிலும் பல்வேறு பிரிவுகள் உள்ளன. கார்ப்பரேட் பின்னணி இல்லாமல் இன்றைய அரசியல் கட்சிகள் இல்லை என்பதுதான் எதார்த்த நிலைமையாகும்.

**நாடாளுமன்றத்தில் உழைக்கும் மக்களும் பங்கேற்கும் வகையிலான அதிகார மாற்றம் தேவை என்பதை முன்வைக்கிறோம். "பாசிச எதிர்ப்பு ஜனநாயகக் குடியரசு" என்பதுதான் இந்த அரசியல் அதிகார மாற்றமாகும்.**

ஆகையால், இந்திய நாட்டின் தேர்தல் என்பது கார்ப்பரேட் வர்க்கங்கள் தங்களுக்கான அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான ஓர் ஏற்பாடாக மட்டுமே உள்ளது. இதனால்தான், எந்தக் கட்சிகள் ஆட்சிக்கு வந்தாலும் தனியார்மயம்-தாராளமயம்-உலகமயம் எனும் மறுகாலனியாக்கக் கொள்கையை நடைமுறைப்படுத்தி வருகின்றன. உலக வர்த்தகக் கழகம், உலக வங்கி, ஐ.எம்.எஃப். போடும் உத்தரவுகளுக்கு அடிபணிகின்றன. நாட்டின் தொழில்வளர்ச்சி என்ற போர்வையில், அன்னிய பன்னாட்டுக் கம்பெனிகளை அழைத்து நமது நாட்டில் தொழில்தொடங்கக் கோருகின்றன. இந்த கார்ப்பரேட் முதலாளிகளை ஈர்க்கும் வகையில் கொள்கையைப் பின்பற்றுவதற்காகத்தான் ஒரு டிரில்லியன் பொருளாதாரம், மூன்று டிரில்லியன் பொருளாதாரமாக தமது மாநிலங்களை மாற்றுவோம் என்று அறிக்கைகளை வெளியிடுகின்றன.

நமது நாட்டிலுள்ள எந்தெந்தக் கட்சிகள் எந்தெந்த ஏகாதிபத்திய நாடுகளின் எந்தெந்த கார்ப்பரேட் முதலாளிகளை ஈர்க்கின்றனர், இந்தியாவின் எந்தக் கார்ப்பரேட் முதலாளிகளுடன் அந்தக் கம்பெனிகள் தொழில் உறவை மேற்கொள்கின்றனர் என்பதைப் பொருத்துதான், அரசியல் கட்சிகளின் கொள்கைகள் அமைகின்றன. இதற்கேற்ப தங்களது திட்டங்களை வகுத்துக் கொள்கின்றன.

ஆகையால், சட்டமன்றங்களும் நாடாளுமன்றமும் கார்ப்பரேட் கட்சிகள் தங்களுக்கிடையில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான ஓர் ஏற்பாடாகும். இந்த ஏற்பாடானது மக்களுக்காக இருக்கிறது என்று மக்களை நம்பவைப்பதற்குத்தான் தேர்தல் முறை அமைந்துள்ளது. இந்த இடத்தில்,

உழைக்கும் மக்களின் அங்கீகாரம் இவர்களுக்கு இருந்தால்தான், தேர்தலில் வெற்றி பெற முடியும் எனும் போது, இக்கட்சிகள் தங்களது கார்ப்பரேட் கொள்கைகளையே மக்களுக்கான உடனடி தீர்வுகளைப் போல பூசி மெழுகி முன்வைத்து தேர்தல் வாக்குறுதிகளாக அறிவிக்கின்றன.

பாசிஸ்ட் மோடி கும்பலோ, இந்த தேர்தல் என்ற முறைக்கே முடிவு கட்டி, அம்பானி, அதானி, வேதாந்தா, மிட்டல், லலித் மோடி, நீரவ் மோடி போன்ற மார்வாரி, குஜராத்தி, பார்ப்பன, பனியா பின்னணி கொண்ட கார்ப்பரேட் முதலாளிகளுக்கு மட்டுமே இந்த நாடு சொந்தம் என்ற வகையில் இந்துராஷ்டிர பாசிச சர்வாதிகாரத்தைக் கொண்டுவருகிறது.

இந்த நிலைமையில், உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி?

தேர்தலில் இந்த பாசிசக் கும்பலை வீழ்த்த வேண்டும் என்பதில் உடன்பட்டாலும், நாடாளுமன்றத்தில் உழைக்கும் மக்களும் பங்கேற்கும் வகையிலான அதிகார மாற்றம் தேவை என்பதை முன்வைக்கிறோம். “பாசிச எதிர்ப்பு ஜனநாயகக் குடியரசு” என்பதுதான் இந்த அரசியல் அதிகார மாற்றமாகும்.

## தேர்தலும் அரசியல்-பொருளாதார மாற்றும்

பா.ஜ.க.வை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றுவது எதிர்க்கட்சிகளின் ஒரே குறிக்கோள். ஆனால், உழைக்கும் மக்களுக்கோ பா.ஜ.க.வை வீழ்த்துவது மட்டுமல்ல, அரசியல்-பொருளாதார மாற்றம் தான் முழுமையான வெற்றியாகும்.

பாசிச மோடி-அமித்ஷா கும்பலின் பத்தாண்டு ஆட்சியானது, ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க.; அம்பானி-அதானி பாசிசத்தின் “புதிய இந்தியா” என்றழைக்கப்படும், ஒரே நாடு ஒரே தேர்தல், ஒரே வரி, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஒரே உணவு என்ற வகையிலான இந்துராஷ்டிரத்தை நிறுவுவதற்கான அடிக்கட்டுமானங்களைக் கட்டியெழுப்பியுள்ளது.

நீட்-கியூட் தேர்வுகள், புதிய கல்விக் கொள்கை 2020, தேசிய உயர் கல்வி ஆணையம், தேசிய மருத்துவ ஆணையம், ஜி.எஸ்.டி., சி.ஏ.ஏ.-என்.பி.ஆர்., உயர்சாதி ஏழைகளுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு, தொழிலாளர் சட்டத் திருத்தங்கள், சுற்றுச்சூழல் சட்டத் திருத்தங்கள், கிரிமினல் சட்டத் திருத்தங்கள், இயற்கை சுற்றுச்சூழல் சட்டத் திருத்தங்கள், பாரத்மாலா-சாகர் மாலா கட்டமைப்பு திட்டங்கள், தேசிய நதிநீர் ஆணையம், அணைகள் பாதுகாப்பு மசோதா, தேசிய கடல் மீன்வள மசோதா, மின்சாரச் சட்டத்திருத்த

மசோதா, பண மோசடி தடுப்புச் சட்டம், ஊபா போன்ற கருப்புச் சட்டங்கள், தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ.), தகவல் தொழில்நுட்ப சட்டம், நீதிபதிகள் நியமன ஆணையச் சட்டம், தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டம், பொதுசிவில் சட்டம் என பல அடிக்கட்டுமானங்களை அது உருவாக்கியுள்ளது. ஊர்களின் பெயர்களை இந்துமயமாக்குவது; பாடப்புத்தகங்களைக் காவிமயமாக்குவது, நாடாளுமன்றத்திற்கு புதிய கட்டடம், காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து போன்றவையும் இந்த அடிக்கட்டுமானங்களில் அடங்கும்.

● பாசிச பா.ஜ.க.வை வீழ்த்துவதெனில், இந்த அடிக்கட்டுமானங்களைத் தகர்க்க வேண்டும். இதற்கு மாற்றாக, உழைக்கும் மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் மாற்று அரசியல்-பொருளாதாரத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டும்.

● அதுமட்டுமின்றி, அதிகார வர்க்கம், சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் சங்கப் பரிவார கும்பல் ஊடுறுவியுள்ளது. பல பெயர்களில் நடந்தேறியுள்ள இந்த ஆர்.எஸ்.எஸ்.மயமாக்கும் நடவடிக்கைகள் உடனடியாக தடை செய்யப்பட வேண்டும். ஆர்.எஸ்.எஸ். சங்கப் பரிவார கும்பல்களின் சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட வேண்டும். இசுலாமியர்கள், தலித்துகள், பெண்கள் மீது காவி குண்டர்கள் நிகழ்த்திய படுகொலைகள், தாக்குதல்களுக்காக அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு விசாரித்து தண்டிக்கப்பட வேண்டும். காவி குண்டர்களால் சேதப்படுத்தப்பட்ட கிருத்தவர்கள், இசுலாமியர்களின் வழிபாட்டுத் தலங்கள், வீடுகளுக்கு நட்ட ஈடு வழங்கப்பட வெண்டும்.

மொத்தத்தில், ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வை தடை செய்வது; மோடியின் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட அத்தனை சட்ட, திட்டங்களையும் ரத்து செய்வது ஆகிய கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் எதிர்க்கட்சிகள் பெறுகின்ற வெற்றியால் உழைக்கும் மக்களுக்கு எந்த நன்மையும் இல்லை.

● இவை மட்டுமல்ல, ஆர்.எஸ்.எஸ். சங்கப் பரிவார அமைப்புகள் வளர்வதற்கு பல வகைகளில் உதவி புரிந்துள்ள, அவற்றால் பெரிதும் பயனடைந்துள்ள அம்பானி, அதானி, அகர்வால், மிட்டல், நீரவ் மோடி, லலித் மோடி, விஜய் மல்லையா உள்ளிட்ட கார்ப்பரேட் கொள்ளையர்களின் சொத்துக்களும் ஜக்கி வாசுதேவ், ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர், சாய்பாபா, சங்கராச்சாரி போன்ற கார்ப்பரேட் சாமியார்களின் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட வேண்டும்.

இவை எது குறித்தும் வாயைத் திறக்காமல், பொதுவாக, வேலை வாய்ப்பை உருவாக்குதல்; பெண்களுக்கு கல்வி வழங்குதல்; எரிவாயு

உருளையின் விலையைக் குறைத்தல், இலவச மின்சாரம், இலவச வீடு, இலவச கேஸ் போன்ற கவர்ச்சி வாக்குறுதிகளை வழங்குவது என்பது மக்களை ஏமாற்றுவதாகும்.

● மிக அண்மையில், தமிழ்நாட்டில் நடந்த போராட்டங்களை எடுத்துக் கொள்வோம். புதிய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தாதே, இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நிரந்தரம் செய்து கொடு, பரந்தூர் விமான நிலையத்திற்காக விவசாய நிலைங்களைக் கையகப்படுத்தாதே, மேல்மா சிப்காட் அமைக்காதே என்று அரசு ஊழியர்களும் மக்களும் போராடி வருகின்றனர். இதுபோன்ற மக்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். சட்டமன்றத் தேர்தல்களிலும் நாடாளுமன்றத் தேர்தல்களிலும் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். ஸ்டெர்லைட்டை நிரந்தரமாக மூடுவதற்கு சிறப்பு சட்டம் இயற்ற வேண்டும். டாஸ்மாக் இழுத்து மூடப்பட வேண்டும்.

● பெட்ரோல் டீசல் மீதான ஒன்றிய, மாநில அரசுகளின் வரிகள் குறைக்கப் பட வேண்டும். பெட்ரோல் பொருட்களின் உற்பத்தி விலையில், தற்போது இருப்பது போல 40-50 சதவிகிதம் வரியாக இல்லாமல், சுமார் 5-10 சதவிகிதத்திற்குள் ஒன்றிய, மாநில அரசுகளின் வரி குறைக்கப்பட வேண்டும்.

● விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதார விலை; தொழிலாளர்களுக்கு எட்டுமணி நேர வேலை - பணிப் பாதுகாப்பு; ஒப்பந்தத் தொழிலாளர் முறை ரத்து; ஆன்லைன் வர்த்தகத்திற்கான கட்டுப்பாடுகளை அதிகரித்து, சிறுவர்த்தகத்தைப் பாதுகாத்தல்; சிறுதொழில்களுக்கான சலுகைகளை அதிகரித்தல்; கார்ப்பரேட் வரியை பழைய வகையிலேயே 30 சதவிகிதமாக உயர்த்துதல் போன்றவை நடைமுறைப்படுத்த வேண்டும்.

● இந்த அரசுக் கட்டமைப்பின் சந்து பொந்துகளைப் பயன்படுத்திதான் பாசிசக் கும்பல் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. ஆகையால், தேர்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்கு உண்மையான சேவையாற்றுவதை உறுதி செய்யும் வகையில், அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும்.





படியுங்கள்:

**தேவை,**
**பாசிச எதிர்ப்பு**
**ஜனநாயகக் குடியரசு**

*அரசியல் மாற்றுக்கான ஒரு கையேடு*

*நன்கொடை :ரூ.30/-*

● தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டாலோ, அவர்கள் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறினாலோ, தேர்ந்தெடுத்தவரை திருப்பியழைக்கும் சட்ட உரிமை மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். அதிகாரிகள் என்ற நிரந்தர அமைப்புதான் ஊழலின் பிறப்பிடமாக உள்ளது. மக்கள் பிரதிநிதிகளையே கட்டுப்படுத்தும் அதிகாரங்களைக் கொண்டுள்ளது. அந்த அதிகார வர்க்கம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அனைத்து அதிகாரிகளுக்கும் வழங்கப்படும் உயர்விகித ஊதியம், சலுகைகள் நிறுத்தப்பட வேண்டும்.

● இத்துடன், தற்போது இருக்கும் தேர்தல்முறையில், தொகுதி வாரியான பிரதிநிதிகள் தேர்வு செய்யும் முறை மட்டுமே உள்ளது. இதனை கொண்டு அமைக்கப்படும் நாடாளுமன்றம் நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் நிறைவேற்றும் உரிமை பெற்றதாக அமைந்துள்ளது. இந்த முறை மாற்றப்பட வேண்டும். கட்சிகளுக்கான பிரநிதித்துவ நாடாளுமன்ற முறை கொண்டுவரப்பட வேண்டும். கட்சிகளுக்கும் கூட்டணிகளுக்கும் மக்கள் வழங்கும் வாக்குரிமை சதவிகிதத்தின் அடிப்படையில் இந்த அவை இருக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ளவை ஒருசில முக்கிய அம்சங்களே. இந்தவகையில், விரிவான அரசியல்-பொருளாதார மாற்றுத் திட்டத்தை முன்வைத்து, அதனை நிறைவேற்றாதவரை பாசிச சக்திகள் மீண்டும் அரசியல் அரங்கில் வளர்வதைத் தடுக்க முடியாது. இன்னும் சொல்லப்போனால், தேர்தலில் எதிர்க்கட்சிகள் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் கூட இனி இருக்காது.

இவற்றை உள்ளடக்கிய, 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கான மக்கள் கோரிக்கைகளை ஒரு கையேடாக வெளியிட்டுள்ளோம். இவற்றை உழைக்கும் மக்களும் ஜனநாயக சக்திகளும் பரிசீலிக்க வேண்டும்; நமக்கான மாற்று அரசியல்-பொருளாதார-சமூக திட்டத்தை நாம் உருவாக்க வேண்டும். அந்த வகையில், மாற்று அரசியல் அதிகாரத்தை அடைவதற்குப் போராட வேண்டும்.

## மக்கள் போராட்டங்களே பாசிசத்தை வீழ்த்தும்!

மக்கள் தங்களது உரிமைகளுக்காகப் போராடும் போது, எந்த அரசியல் கட்சிகளையும் சேர்த்துக் கொள்ளவும் தயாராக இல்லை. அந்த அளவிற்கு தேர்தல் அரசியல் கட்சிகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

இன்றைக்கு இருக்கும் பெரும்பாலான எதிர்க்கட்சிகள், கார்ப்பரேட் கொள்கையே தங்களது ஒரே இலட்சியமாகக் கொண்டு செயல்படுகின்றன.

மக்களின் போராட்டங்கள்தான் இவர்களது தேர்தல் வெற்றிக்கு அடிப்படையாக அமைந்துள்ளன என்பதை எதிர்க்கட்சிகள் இன்றைக்கு வரை அங்கீகரிக்கவில்லை. ஹரியானா விவசாயிகள் டெல்லியை முற்றுகையிட்ட பின்னர், நாட்டின் மனநிலை மோடிக்கு எதிராகத் திரும்பிவிட்டது என்பதை உணர்ந்த பின்னர்தான் சமாஜ்வாதி கட்சியின் அகிலேஷ் யாதவும் ஆம் ஆத்மி கட்சியும் காங்கிரசுடன் கூட்டணி பேரத்தை விரைவாக முடிப்பதில் முனைப்பு காட்டின.

மக்களால் தான் எதிர்க்கட்சிகளுக்கு வாழ்வு கிடைக்கிறது. பா.ஜ.க.வுக்கு எதிரான மக்கள் போராட்டங்கள்தான், எதிர்க்கட்சிகள் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அடிப்படையாக உள்ளன. இந்த மக்கள் போராட்டங்கள்தான், இன்றைக்கும் மோடி-அமித்ஷா கும்பலைத் தோல்வியை நோக்கி மட்டுமல்ல, படுகுழியை நோக்கித் தள்ளியுள்ளது.

ஆகையால், மக்கள் போராட்டங்களைக் கட்டியமைப்பதுதான் பாசிசத்தை வீழ்த்துவதற்கான ஒரே வழி! மக்களின் கோரிக்கைகளை ஓட்டு அறுவடைக்கான தேர்தல் வியூகங்களாக மட்டுமே அரசியல் கட்சிகள் கருதுகின்றன. இந்த எதிர்க்கட்சிகளை நிர்பந்தித்து மக்கள் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு கூட மக்கள் போராட்டங்களே அவசியமாகும். அந்தவகையில், பாசிசத்திற்கு எதிரான மக்கள் எழுச்சிதான் நாட்டையும் எதிர்க்கட்சிகளையும் பாதுகாக்கும்!

### வளர்ந்து வரும் மக்களின் விழிப்புணர்வு

தேர்தல் நேரத்தில் போராட்டமா, மக்கள் எழுச்சியா என்று சிலர் கேள்வி எழுப்பலாம். இவ்வாறு கேள்வி எழுப்புபவர்கள் தேர்தலையும் புரிந்து கொள்ளவில்லை, ஜனநாயகத்தையும் புரிந்து கொள்ளவில்லை.

ஜனநாயகம் என்பதே, முதலாளியும் தொழிலாளியும் ஒன்றாக இருப்பதற்கான ஓர் ஏற்பாடாகும். அப்படியென்றால், முதலாளி தொழிலாளியை சுரண்ட மாட்டார் என்று பொருளா? இல்லை. முதலாளி தொழிலாளியை சுரண்டுவதை சட்டப்படி செய்ய வேண்டும், இதுதான் ஜனநாயகம்!

அந்தவகையில் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், நெசவாளர்கள், மாணவர்கள், பெண்கள், சிறுதொழில் செய்வோர், சிறுவியாபாரிகள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், வணிகர்கள், பழங்குடி மக்கள் வெளிநாட்டுக்குச் சென்று வருவாய் ஈட்டுவோர் என்று உழைக்கும் மக்களின் பல்வேறு பிரிவினரின் உரிமைகளை அங்கீகரித்துதான் கார்ப்பரேட் முதலாளிகள் தங்களது தொழிலை நடத்திக் கொள்ள வேண்டும்.

இந்த ஏற்பாட்டை மீறி, அனைத்து கட்சிகளும் உழைக்கும் மக்களுக்கு உரிமை வழங்குவதாக வாக்குறுதிகளை வழங்கிவிட்டு, தேர்தலில் ஓட்டு வாங்கி அதிகாரத்திற்கு வந்த பின்னர், வாக்குறுதிகளை நிறைவேற்றாதது மட்டுமல்ல, உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பறிப்பதையே முதல் கடமையாக செய்து வருகின்றன; கார்ப்பரேட் கொள்கைகளை மட்டுமே நடைமுறைப்படுத்துகின்றன; நாட்டின் இயற்கை வளங்களை வகைதொகையின்றி சூறையாடுவது, பழங்குடி மக்களையும் விவசாயிகளையும் விரட்டியடிப்பது; தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிப்பது; சிறுதொழிலை நசுக்குவது; மாணவர்களின் கல்வி உரிமையைப் பறிப்பது... போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்கின்றன; போராடும் மக்களை கருப்புச் சட்டங்கள் போட்டு ஒடுக்குகின்றன.

**மக்கள் போராட்டங்களைக் கட்டியமைப்பதுதான் பாசிசத்தை வீழ்த்துவதற்கான ஒரே வழி! பாசிசத்திற்கு எதிரான மக்கள் எழுச்சிதான் நாட்டையும் எதிர்க்கட்சிகளையும் பாதுகாக்கும்!**

ஆகையால், உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில், ஓர் அரசியல்-பொருளாதார மாற்றும், அதற்கான மக்கள் எழுச்சியும்தான் பாசிசத்தை வீழ்த்தும்; எதிர்க்கட்சிகள், உழைக்கும் மக்களின் உரிமைகளை ஈடேற்றுவதற்குக் கூட முன்வரும்.

★★★

ஆகையால், மாற்று திட்டங்களை முன்வைத்தாலும், கட்சிகளைத் தேர்ந்தெடுக்க நடக்கும் தேர்தலில் மாற்று அரசியல்-பொருளாதாரத் திட்டத்தை முன்வைத்து போராட்டங்கள், மக்கள் எழுச்சி உடனடியாக சாத்தியமில்லை என்று தோன்றலாம். ஆம், உடனடியாக மக்கள் போராட்டக் களத்திற்கு வரப்போவதில்லை.

ஆனால், மக்கள் போராட்டங்களுக்கே வழியில்லை என்றால் எதிர்க்கட்சிகளுக்குக் கூட வாழ்வு இல்லை. மக்கள் மீது அடக்குமுறைகள் அதிகரிக்கும் போது எந்த எதிர்க்கட்சியும் வீதிக்கு வந்து மக்களுடன் நின்று போராடுவதில்லை. ஆகையால், தேர்தல் என்பது எதிர்க்கட்சிகளுக்கு இருக்கும் ஒரே களம். மக்களுக்கோ தேர்தலும் ஒரு களம், அவ்வளவே!

கோடிக்கணக்கில் காசு போட்டு காசு எடுக்கும் நடவடிக்கையாக தேர்தல் அரசியல் அமைந்துள்ளது. இந்த வகையிலான ஒரு தேர்தல் முறையையும்

**தேர்தல் என்பது எதிர்க்கட்சிகளுக்கு இருக்கும் ஒரே களம். மக்களுக்கோ தேர்தலும் ஒரு களம், அவ்வளவே!**

ஒழித்துவிட்டு, மொத்தமாக அம்பானிக்கும் அதானிக்கும் நாட்டைக் கூறுபோட்டு வருகிறது மோடி கும்பல். இச்சூழலில், மக்களுக்கான ஜனநாயகமான தேர்தல் முறை வேண்டும் என்பதே மக்களிடம் உருவாகியுள்ள அரசியல் விழிப்புணர்வின் வெளிப்பாடாகும். அதற்கான ஒரு மாற்று தான், பாசிச எதிர்ப்பு ஜனநாயகக் குடியரசு என்கிற எமது முன்மொழிதலாகும்.

பாசிசத்தை எதிர்த்துப் போராடும் ஜனநாயக சக்திகள், இந்த உண்மையில் இருந்து தங்களது செயல்பாடுகளை வகுத்துக் கொள்ள வேண்டும்.

சாம, தான, பேத, தண்ட எனும் பார்ப்பன சதிக் கோட்பாட்டையே தனது கொள்கையாகக் கொண்டுள்ள பாசிசக் கும்பல், எந்த முறைகேடுகளையும் குற்றங்களையும் துணிந்து மேற்கொள்ளும். ஆகையால், இந்தத் தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்துவதற்குக் கூட, மக்கள் எழுச்சி அவசியமாகும். மேலும், பா.ஜ.க.வை தேர்தலில் தோற்கடித்தாலும், அதிகாரத்தை எதிர்க்கட்சிகள் தக்க வைத்துக் கொள்வதற்கே போராடும் நிலைமைதான் இன்றும் உள்ளது. அதிகார வர்க்கத்தின் அனைத்து மட்டங்களிலும் சமூகத்தின் அனைத்து இடங்களிலும் ஆர்.எஸ்.எஸ். என்ற நச்சுக்கிருமி ஊடுறுவி உள்ளது. இது மதக் கலவரங்களைத் தூண்டிவிடும்; குதிரை பேரங்களை நடத்தும்; அதிகாரத்தில் இருக்கும் தனது உளவாளிகளைக் கொண்டு அரசுக்கெதிரான சதிகளில் ஈடுபட்டு, எதிர்க்கட்சிகளுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும்; இந்த நெருக்கடியைப் பயன்படுத்தி மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது மட்டுமின்றி, பொய்களை அவிழ்த்துவிட்டு, நேரடியாக பாசிச சர்வாதிகாரத்தை அரங்கேற்றிவிடும். ஆகையால், இந்த தேர்தல் என்பது உழைக்கும் மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள இறுதி எச்சரிக்கையாக உணர்ந்து, பாசிசத்திற்கு எதிரான மக்கள் எழுச்சிக்குத் தயாராவோம்!

**வேண்டாம் பி.ஜே.பி., வேண்டும் ஜனநாயகம் என்று முழங்குவோம்!**
**பாசிச எதிர்ப்பு மக்கள் எழுச்சிக்குத் தயாராவோம்!**

★★★

பா.ஜ.க.வை தேர்தலில்
வீழ்த்துவது எப்படி என்பது
மக்களின் கவலையாகும்.
ஜனநாயக சக்திகள்
“இந்தியா” கூட்டணிக்கு
வாக்களிக்கலாம் என்று
நம்புவதைப் போல மக்கள்
இக்கூட்டணியினரை
நம்ப வேண்டுமெனில்,
என்ன செய்ய வேண்டும்
என்பதுதான், பா.ஜ.க.வை
தேர்தலில் வீழ்த்துவதில்
அடங்கியுள்ளது.



ம.க.இ.க. – பு.மா.இ.மு. – பு.ஜ.தொ.மு. – மக்கள் அதிகாரம்

மாநில ஒருங்கிணைப்புக்குழு